# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 36வது கூட்டறிக்கை 2021.02.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 36வது அமர்வு 2021.02.09 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 04. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 36வது அமர்வுக்கு வரவேற்றவனாக, நீண்ட காலத்திற்கு பின் எமது கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் சமூகமளித்திருக்கின்றார் அவரையும் வரவேற்றவனாக,

இன்று சபைக் கூட்டத்திற்கு கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள் சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அதை சபைக்கு சமர்ப்பித்தவனாக, இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களே இந்த காலகட்டத்தில் குளிரூட்டப்பட்ட இடங்களில் பலர் கூடுவது ஒரு ஆபத்தான விடயமாக சுகாதாரப் பிரிவினர்கள் கூறி வருகின்றார்கள். அதற்கு காரணம் கொவிட் 19 ஆரம்பத்தில் வாயின் ஊடாக வெளிப்படும் துளிகள் மூலம் பரவுகின்றது என்று ஒரு எண்ணம் இருந்தது. அந்த துளிகள் ஏதாவது ஒரு இடத்தில் பதியும் போது அவ் இடத்தை தொட்டு நாம் வாய், முகத்தை தொடும் போது அது உட்செல்கின்றது என்ற ஒரு விளக்கம் இருந்தது. நாம் பேசும் போது உருவாகும் Micro Spray அதனூடாகவும் இப்படியான சூழலில் அது இன்னொருவரை சென்றடையலாம். அதற்காக நிச்சயமாக சமூக இடைவெளி பேணப்பட வேண்டும். சமூக இடைவெளி பேண முடியாத ஒரு கட்டத்தில் நிச்சயமாக முகக்கவசம் அணிதல் வேண்டும். மற்றும் சுகாதார வழிமுறைகள் பேண வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கின்றது. அதனால் எமது நலத்தை பேணி சுகாதார கட்டுப்பாடுகளை மிகவும் இறுக்கமாக பேண வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சென்ற மாதம் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒன்றியம் குருநாகல் மாநகர சபையில் அதன் வருடாந்த கூட்டத்தை நடாத்தியது. அதில் ஒவ்வொரு பகுதியிலும் இருந்து வருகைதந்த தவிசாளர்கள், முதல்வர்கள் உள்ளூராட்சியில் இன்று இருக்கும் பிரச்சினைகளைப்பற்றி பேசினார்கள். அவ்விடயத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆளுனர்களின் அழுத்தங்களினால் உள்ளூராட்சி அரசியல் மயப்படுத்தப்படுகின்ற ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. துரதிஸ்டவசமாக கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அவர்கள் பொறுப்பேற்று ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னும் கரையோரத்தின் தவிசாளர்களை சந்திக்க முயற்சிக்கவில்லை. நாங்களும் பல வழிகளால் ஒரு சந்தர்ப்பம் கோரியும் இன்னும் எங்களை சந்திப்பதற்கு ஆளுநருக்கு நேரம் கிடைக்கவில்லை என்று மனவருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனென்றால் மாகாண சபை இயங்காத இடத்தில் ஆளுநரிடம்தான் சகல அதிகாரங்களும் உள்ளது. அரசியல் யாப்பின் படி இறுதி அதிகாரம் ஆளுநரிடம் இருந்தாலும், நாளாந்த நடடிக்கைகள் அமைச்சு மட்டங்களில் நடந்து வந்தது. ஆனால் இன்று மக்கள் பிரதிநிதி இல்லாத இடத்தில் சகல அதிகாரமும் ஆளுநரிடமே இருக்கின்றது. அதனால் ஆளுநர் மக்கள் பிரதிநிதிகளை சந்திப்பது மிகவும் முக்கியமான விடயம்.

எமது அபிவிருத்தி வேலைகளுக்கு மத்தியில் இருந்து ஒதுக்கீடுகள் செய்தாலும் மாகாணத்திற்கு வரும் ஒதுக்கீடுகளில் நமக்கும் சரிபங்கு கிடைப்பதற்கு அவர் மூலமாகத்தான் நாம் முயற்சி எடுக்க வேண்டும். ஆளும் தரப்பின் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இதை கவனத்தில் கொண்டு ஆளுநரோடு சந்தித்து இதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் தவிசாளராக வந்த காலத்திற்கு முன்பு இருந்து சபையின் சட்ட நடவடிக்கைகள் எல்லாவற்றையும் நடாத்தி வந்த இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல இந்த மாகாணத்தில் முதிர்ந்த சட்டத்தரணி மர்ஹூம் தாஹா சைனுதீன் அவர்களுக்கு நமது பிரார்த்தனைகளும் அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் ஜென்னதுல் பிர்தௌஸை வழங்க வேண்டும் என்று உங்கள் சார்பிலும் கேட்டுக் கொண்டு இவ்வளவு காலமும் இந்த சபையின் சட்ட நடவடிக்கைகளுக்கு அவர் வழங்கிய பங்களிப்பை நாம் நினைவு கூறியவர்களாக,

சென்ற ஞாயிற்றுக் கிழமை மத்திய அரசில் இருந்து மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து உத்தியோகத்தர்கள் நமது அபிவிருத்தி வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு வந்திருந்தார்கள். அதில் உள்ளூராட்சி சபைகளின் வருமானங்களை கூட்டுவதற்காக நாம் கொடுத்திருந்த Solar Project முன்மொழிவை எமது Compost Yard இற்கும், இந்த அலுவலகத்தின் கூரையில் இடுவதற்கும் பார்வையிட்டு இறுதியான முன்மொழிவை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கிவிட்டு சென்றிருக்கின்றார்கள். இவ் வருடத்தில் பாதைகளுக்கு என ஒதுக்கீடுகள் அமைச்சுகள் ஊடாக வருவதற்குரிய சாத்தியங்கள் இல்லை என்று கூறி, இப்படியான வருமானங்கள் ஏற்படுத்தப்படும் திட்டங்களுக்கு அவர்கள் வழிமுறைகள் செய்யலாம் என்ற ஒரு அறிவுரையை கூறினார்கள். அதற்கு ஏற்ப இப்பகுதியில் மலசல கழிவுகளை சுத்திகரிக்கும் ஒரு சட்டபூர்வமான ஒரு அமைப்பு அம்பாரை UC ஐ தவிர வேறு இல்லை. அதற்கு இன்றுவரை நமது நாட்டில் செயற்படுத்தப்படும் Open Pit System ஒரு பிரச்சினையாக வருகின்றது.

குடியாட்டங்கள் கூடும் போது இப் பகுதிகளில் துர்நாற்றம் வரும் என்பதால் சென்ற ஆட்சி காலத்தில்கூட சம்மாந்துறை பிரதேச சபைக்கு Unicef இனால் ஒரு Project வந்தது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால் நவீன முறையில் German Technology மூலம் சீல் செய்த சிலின்டர்களாக நிலத்திற்குள் புதைத்து செய்யக்கூடிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. நாம் அதை கரையோரப் பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களும் சேவை செய்வதாக கணித்து 50m$^3$ Process செய்யக்கூடிய Plant உருவாக்குவோமானால் ஏறத்தாள 9.5மில்லியன் தேவைப்படுகின்றது. அந்த முன்மொழிவையும் அமைச்சுக்கு வைத்திருக்கின்றோம். மாரி காலங்களில் கரையோரப் பகுதிகளில் செய்யக்கூடிய இடங்கள் இல்லை. ஒன்று இறக்காமம் மற்றயது சம்மாந்துறை தமிழ் பேசும் பிரதேசங்களில் செய்யலாம். அதையும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று Project Proposal ஒன்று தயாரிக்கின்றோம். அதுவும் வெற்றிபெற வேண்டும் என்று கூறிக் கொள்கின்றேன்.

சென்ற மாதத்தின் செலவுகளில் நீங்கள் அவதானிக்க வேண்டியது என்னவென்றால் ஜனவரி மாதத்தின் ஊழியர்களின் சம்பளம் பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதிதான் செலவீனமாக பதியப்படும். டிசம்பர் மாதத்தின் சம்பளம் வருட இறுதி என்பதால் டிசம்பர் மாத செலவிலே காட்டப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்தில் ஊழியர்களின் சம்பளத்தை தவிர மற்ற முழு செலவீனமும் ரூபா 375,000.00 ஆகும். நான் உங்களுக்கு சென்ற கூட்டத்தில் கூறியவாறு முதல் 06 மாதமும் நமது செலவீனங்களை நாம் மிகவும் கவனமாக செலுத்த வேண்டும். அதன் அடிப்படையில் ஜனவரி மாதம் Assessment இல் அதிகமானவர்கள் முழுத் தொகையையும் செலுத்தி சலுகையை பெறுவதற்காக முயற்சி எடுக்கின்றார்கள். அந்த வருமானத்தோடு இந்த செலவுகளில் ஏதாவது விளக்கங்கள் தேவைப்படின் கேட்கலாம். இல்லாவிடில் அதை ஆமோதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

### தீர்மானம் - 04/36/01

சென்ற மாதம் 2021.01.01 தொடக்கம் 2021.01.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

தற்போதய அசாதாரண நிலமையை கருத்திற் கொண்டு நாம் வழமையாக வரி ஜனவரி மாதம் 31ஆந் திகதிக்குள் முழுமையாக செலுத்துவோருக்கு 10% சலுகை வழங்கினோம். இந்த அசாதாரண சூழ்நிலைக்காக அச் சலுகையை மார்ச் மாதம் 31ஆந் திகதி வரை இந்த வருடத்திற்குரிய சகல வரியையும் செலுத்துபவர்களுக்கு 10% சலுகை வழங்குவதற்கு சபையின் அங்கீகாரத்தை கேட்கின்றேன். இதுதான் எமக்கு முக்கிய வருமானமாக இருக்கின்றது. இது பல சபைகள் செய்திருக்கின்றது. அதே போல் நாமும் வழங்க வேண்டும்.

### தீர்மானம் - 04/36/02

தற்போதய அசாதாரண நிலமையினைக் கருத்திற் கொண்டு, 2021 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியினை நிலுவையின்றி முற்றாக செலுத்துவோருக்கு எம்மால் வழங்கப்படும் 10 வீத கழிவினை மார்ச் மாதம் 31 ஆந் திகதி வரை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நாம் Road Inventory இனை முடிக்க வேண்டும். இது எதிர்கால அபிவிருத்தியை முன்மொழிவதற்கு ஆகும். நாம் அனுப்பியதில் சில Column நிரப்பப்படவில்லை என்று மீண்டும் அனுப்பியிருக்கின்றார்கள். அதை அவசரமாக ஒரு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும். Road Inventory இனை வைத்துதான் எல்லா அமைச்சுகளும் முடிவு எடுக்கும். அதனை முடிப்பதற்கு தற்போது கடமையாற்றும் QS பயிலுநர்களுக்கு போக்குவரத்து ஊக்குவிப்பு வழங்குவதற்கான அங்கீகாரம்.

**தீர்மானம் - 04/36/03**

Road Inventory தயாரிப்பு மற்றும் பௌதீக திட்டமிடல் பணிகளில் 03 QS பயிற்சி பெற்ற பயிலுநர்கள் முன்னர் கடமையாற்றினர். தற்போது ஒருவரே கடமையாற்றுகின்றார். குறித்த பணிகளில் பயிலுநராக தொண்டர் அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கு போக்குவரத்து ஊக்குவிப்பு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/36/04**

சீருடை கொடுப்பனவு பெற தகுதியான ஊழியர்களுக்கு சீருடைய பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/36/05**

ஏற்கனவே CICRA என்னும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ICTA நிறுவனத்தின் ஆலோசணைக்கு அமைய வீதவரி தொடர்பான நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்பட்டு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. 2021 ஆம் ஆண்டில் இருந்து சபையின் ஏனைய வருமானங்களையும் கணனிமயப்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக மாதாந்தம் சேவைக் கட்டணமாக குறித்த நிறுவனத்திற்கு ரூபா 16,000.00 கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வளத்தாப்பிட்டியில் சந்தை வளவு பராமரிப்பு இல்லாத நிலை. கடைகளை வாடகைக்கு கொடுத்தாலும் துப்பரவு செய்வதற்கு இங்கு இருந்து செல்ல வேண்டும். அதில் ஒரு தனியார் நிறுவனம் ஒரு அனுமதி கேட்டிருக்கின்றார்கள். ஒரு தற்காலிக Hut அமைத்து பிள்ளைகளுக்கு இலவச வகுப்பு நடாத்துவதற்கு கேட்டிருக்கின்றார்கள். வாடகையை அவர்கள் சபைக்கு தருவார்கள். தற்காலிக Hut இனையும் அவர்கள் உருவாக்குவார்கள். நாம் அக் கடைகளுக்கு பொதுவாக மலசலகூடத்தை அமைத்து அந்த வளாகத்தில் ஒரு வகுப்பு நடாத்துவதற்கு ஒரு அனுமதியை ஒழுங்கான முறையில் ஒப்பந்தம் செய்து கொடுப்பதற்கு சபையின் அங்கீகாரம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கேட்டிருக்கின்ற தனியார் நிறுவனம் உண்மையிலே பதிவு செய்யப்பட்டதா? மீளப் பெறக்கூடிய மாதிரி ஒரு அமைப்பு அவர்களிடம் இருக்கின்றதா? என்பதை ஆய்வு செய்து, உண்மையாக கல்விக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத்தான் வேண்டும். ஆனால் கேட்பவர்களைப்பற்றி ஆராய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சட்டபூர்வமாக அங்கு இருக்கும் எமது அமைப்புகளுடனும் பேசி அதை சட்டபூர்வமாக செய்வதற்கு செயலாளரை பணிப்போம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதை ஒத்ததாக இன்னுமொரு ஆலோசணையை முன்வைக்கலாம் என்று நினைக்கின்றேன். சென்ற கிழமை நாம் கூடிய போது வகுப்புகளை திறக்க வேண்டும் என்பதில் பல நடைமுறைகளை விதித்தோம். தற்போது நடைபெறுகின்ற இடங்கள் அனைத்தையும் பார்வையிட்டால் மிகவும் குறுகியமானதும் சனச் செறிவு கூடியதுமாகத்தான் வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றது. நான் நினைக்கின்றேன் எமது சொந்தப் பாவனையில் உள்ள சென்னல் கிராம நூலகத்திற்கு அருகில் இருக்கின்ற வளவில் நாங்கள் வாடகைக்கு கொடுத்தோ அல்லது ஏதோ ஒரு ஏற்பாட்டை கல்வியின் சிறப்பை முன்னிட்டு அதிலும் ஒரு Center அமைக்கலாம். எமது சந்தைக்கு முன்பாகவும் உள்ளது. கல்வி நடவடிக்கைகள் சிறப்பாக வரவேண்டும் என்றால் அதிலும் ஒன்று அமைக்கலாம். எவ்வளவோ அபிவிருத்தி செய்தும் ஒரு பராமரிப்பு இல்லாமல் எந்தவொரு வருமானமும் இல்லாமல் இருக்கின்றது. அவ்வாறு விட இயலாது வருமானம் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தனியே கேட்ட ஒருவருக்கு மாத்திரம் இந்த இடத்தை கொடுக்காமல் இதனை நாம் குத்தகை அடிப்படையில் விலை மனு கோரி யார் எமக்கு கூடுதலாக தருகின்றார்களோ அவர்களுக்கு கொடுப்போம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் உண்மையாக நடந்தது அதில் 02 கடைகள் இருந்தது. முதல் சந்தையாக இருந்து பாவிக்காமல் இருந்தது. அதன் பின் சபையால் செலவளித்து 02 கடைகளை எடுத்தோம். அதில் ஒரு கடை கொஞ்ச நாள் நடந்து அது மூடிய பின் அந்த வளவை துப்பரவு செய்வதற்கு ஒருவரும் இல்லாமல் இருந்தது. இவர்கள் முதல் எமது சனசமூக நிலையத்தை கேட்டார்கள். அது சமூகத்தின் தேவைக்காக கொடுத்தால் பிரச்சினை என்று அவர்கள் மாற்றாக இந்த வளவை கேட்டிருக்கின்றார்கள். அவர்கள் மட்டும்தான் கேட்டிருக்கின்றார்கள். இல்லாவிட்டால் நாம் Public ஆக அறிவித்துவிட்டு செய்வோம். கல்வி என்பதால் அதற்கு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவே தவிர வேறு ஒன்றுக்கும் இல்லை. வியாபாரத்திற்கு கேட்டிருந்தால் யோசித்து இருக்கலாம். இது கல்வி அதுவும் அவ் ஊர் மக்களுக்காக செய்வது. அதை சட்ட ரீதியாக செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/36/06**
வளத்தாப்பிட்டியில் பிரத்தியேக வகுப்புகளை நடாத்துவதற்காக வளத்தாப்பிட்டி சந்தை வளவினை தற்காலிகமாக வாடகைக்கு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/36/07**

இறக்காமம் பிரதேச சபையிடம் இருந்து வாடகைக்கு பெறப்பட்ட டம்ரக் இயந்திரத்திற்கு (LL - 6431) வாடகையாக ஒரு நாளைக்கு ரூபா 3000.00 உம், ஒரு மாதத்திற்கு (20 நாள் x 3000) ரூபா 60,000.00 உம் செலுத்துவதற்கும், Running திருத்தங்களுக்கு எமது சபையும், Major திருத்தங்களுக்கு இறக்காமம் பிரதேச சபையும் பொறுப்பாக இருக்கும். அத்துடன் அதன் மின்கலங்கள் மாற்றுவதற்கும், சேவிஸ் செய்வதற்கும், பிரேக் திருத்தம் செய்வதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/36/08**

சபையின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டில் அபிவிருத்தி திட்டத்தினை அமுல்படுத்தும் திட்டத்தில் அலுவலக கட்டிடம் மற்றும் சேதனப் பசளை தயாரிக்கும் இடத்திற்கும் சூரிய மின் சக்தி பிறப்பாக்கிகளை நிறுவுவதற்கு முன்மொழிவை அனுப்புவதற்கும், அதற்கான கட்டிட வரைபடத்திற்கான அனுமதியினை வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/36/09**

உள்ளூராட்சி அமைச்சினால் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான பின்வரும் முன்மொழிவுகளை அனுப்புவதற்கும், அனுமதி கிடைத்த பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவதற்குமான பிரேரணை.

1. Repairs to Alayadi Market (Re Current) – 500,000.00
2. Const of Toilets at Hijra Market – 01 Million ( Capital )
3. Extension of Covered area at Malwatha Market – 01 million (Capital)

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/36/10**

பிரதான அலுவலகத்தில் Electricity Control Unit Room அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபைக்கு என்னால் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவு சம்புமடு உப தபால் நிலையத்தை இடமாற்றுவதற்கான பிரேரணை. கௌரவ தவிசாளர் அவர்களே, குறித்த தபால் நிலையம் மலையடிக்கிராமம் - 04ம் பிரிவில் அமைந்துள்ள கட்டிடத் தொகுதியில் இயங்க வேண்டிய தபால் நிலையம் ஆனால் தற்போது விளினியடி 1ம் கிராம சேவகர் பிரிவில் உள்ள சபூர்சனச கட்டிடத் தொகுதியில் இயங்கி வருகின்றது. இதனால் அந்த பிரதேச மக்கள் மிகவும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர். குறித்த சம்புமடு உப தபால் நிலையத்தில் மாதம் தோறும் 994 குடும்பங்கள் மாதாந்த கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்காக சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் ஏலவே தெரிவு செய்யப்பட்ட மொத்தமாக சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுமார் 2856 குடும்பங்கள் மொத்தமாக 856,850.00 ரூபா பணம் பெறப்படுகின்றது.

இதில் குறித்த தபால் நிலையம் அமையப் பெற்றுள்ள பிரதேசத்தின் அண்டிய பிரதேசங்களாக சென்னல் கிராமம் 1ம் பிரிவில் 110 குடும்பங்களும், 2ம் பிரிவில் 164 குடும்பங்களும், மலையடிக்கிராமம் - 03 இல் 102 குடும்பங்களும், மலையடிக்கிராமம் - 04 இல் 108 குடும்பங்களும், உடங்கா முதலாம் பிரிவில் 93 குடும்பங்களும், உடங்கா – 02 ம் பிரிவில் 75 குடும்பங்களும் மொத்தமாக 652 குடும்பங்கள் இயங்கா நிலையில் உள்ள அந்த தபால் நிலையத்தை அண்டிய கிராம சேவகர் பிரிவுகளிலும், தற்போது இயங்கப்பட்டு இருக்கின்ற விளினியடி 1ம் பிரிவில் உள்ள அதை அண்டிய பிரதேசங்களாக கருவாட்டுக்கல் - 1 இல் 52 குடும்பங்களும், கருவாட்டுக்கல் - 02 இல் 42 குடும்பங்களும், கருவாட்டுக்கல் - 3 இல் 27 குடும்பங்களும், விளினியடி 1ம் பிரிவில் 100 குடும்பங்களும், விளினியடி 2ம் கிராம சேவகர் பிரிவில் 45 குடும்பங்களும், விளினியடி 03ம் பிரிவில் 58 குடும்பங்களும் மொத்தமாக 232 குடும்பங்கள் ஆகும். ஆகவே உண்மையாகவே பிரயோசனமடையக்கூடிய மக்களுக்கு அக் கட்டடம் இயங்கவில்லை. இதனை அண்டியுள்ள குடும்பங்களுக்காக 652 குடும்ப உறுப்பினர்கள் அங்கு இருந்து இங்கு வந்து மாதாந்த பணத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலமை இருக்கின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் துரதிஸ்டவசம் என்னவென்றால் மாதந்தோறும் 85 – 110 குடும்பங்கள் இப் பணத்தை பெறாமல் இருக்கின்றார்கள். காரணம் இப் பணத்தை பெறக்கூடியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற மக்களுக்கு 150.00 – 500.00 ரூபா வரையிலான பணம் வழங்கப்படுகின்றது. 150.00 ரூபா பணம் பெறக்கூடிய ஒருவர் சென்னல் கிராமத்தில் இருந்து இங்கு வருவதற்கு முச்சக்கர வண்டிக்காக 200.00 ரூபா கொடுக்க வேண்டி இருக்கின்றது. இவ்வாறான ஒரு நிலமையில் இந்த மக்கள் அப் பணத்தினை பெறாமல் இருக்கின்றார்கள். ஆகவே இந்த சேவை மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக 1994ம் ஆண்டு மர்ஹூம் பெருந்தலைவர் M.H.M.அஷ்ரப் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அந்த இடத்திலே ஒரு பொது சந்தையும், பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான கட்டிடமும், உப தபால் நிலைய கட்டடமும் கட்டப்பட்டது. இந்த மூன்றுமே இன்று வரைக்கும் இயங்கவில்லை.

குறித்த காலம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான அக் கட்டடம் ஜனசவிய திட்டத்தின் கீழ் இயங்கியது. அந்த திட்டம் நிறுத்தப்பட்ட பின்னர் அக் கட்டடம் இயங்கா நிலையில் இருந்து தற்போது அக் கட்டடம் எமது சபையின் பராமரிப்பில் உள்ள சந்தைக்கட்டடம் மக்கள் பாவனைக்காக திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றது. ஏனைய 02 கட்டடங்களையும் ஊர் காவற் படையினர் அவர்களுடைய தேவைக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். குறித்த தபால் நிலைய கட்டடத்தினை அவர்களும் அவர்களுடைய வாகன தரிப்பிடமாகத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இப் பிரதேச மக்களின் நிலையை கருத்திற் கொண்டு இந்த உப தபால் நிலையத்தை இயங்க செய்வதற்காக இந்த சபையினால் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எனது பிரேரணையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களே, இந்தப் பிரேரணையை ஆமோதித்தவனாக நாம் கடந்த காலத்தில் இந்த தபால் நிலையம் ஒரு தபால் நிலையமாக வர வேண்டும் என்று பல கருத்துகளை முன்வைத்து

விவாதித்திருக்கின்றோம். ஆனால் இந்தக் கோணத்தில் பார்க்கும் போது 652 குடும்பங்கள் அந்த சிறிய தொகையை பெறுவதற்கு விளினியடிக்கு வர வேண்டியதாக இருப்பதாகவும், அதனை பெறாமல் இருப்பதும் ஒரு முக்கிய காரணமாக நாம் முன்வைக்கலாம். ஆனால் நமது சபையில் அந்த துறையை சேர்ந்த சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் இருக்கின்றார். அவரும் முதல் இதைப்பற்றி கூறியிருந்தார். இந்த காரணத்தை முன்வைத்து உண்மையாக அந்த தபாலகம் அந்த பகுதிக்கு சொந்தமானது. அல்லது அந்த பகுதிக்கு சொந்தமாக இன்னுமொரு தபாலகமும் இருந்தது. ஆனால் தற்போது அப் பகுதிகளில் இருக்கும் நிறுவனங்களுக்கு சேவை செய்யும் இடமாகவும் மாறிவிட்டது. அதனால் அதை அங்கு இடமாற்ற முடியாது. இதற்கு என்ன தீர்வை தபால் அமைச்சு மூலம் பெறலாம் என்ற வழிமுறையை நமக்கு எடுத்து விளக்குமாறு கௌரவ உறுப்பினர் யூசுப் அவர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சக உறுப்பினர் இவ்வாறான ஒரு கோரிக்கை மீண்டும் அதே சபையில் அவரால் முன்வைக்கப்பட்டதையிட்டு நான் அதை வரவேற்றவனாக, எமக்கு ஏற்கனவே பல தடவைகள் இது சம்மந்தமாக இந்த சபையில் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. இன்று பொதுசன மாதாந்த கொடுப்பனவு என்பது 150 ரூபா எமது சக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டு இருந்தார். ஆகக் குறைந்த தொகை 250 ரூபா ஆகும். அதே நேரத்தில் சம்புமடு என்கின்ற தபாலகம் உண்மையிலே சம்புமடு கிராமத்தில்தான் அன்று அமையப் பெற்றிருந்தது. துரதிஸ்டவசமாக கடந்த காலங்களில் 1990 இற்கு மேற்பட்ட காலங்களில் ஏற்பட்ட அசாதாரண நிலைகளினால் அந்த தபாலகத்தை அந்த காரணத்தை கூறி அல் மர்ஜான் பாடசாலைக்கு முன் கொண்டு வந்து சேர்த்தார்கள். 1994 ஆம் ஆண்டு இருந்த அரசாங்கத்தில் அரசியல்வாதிகள் மூலம் சில இடங்களில் கூறப்பட்டது போல் கட்டடங்கள் உப தபாலகங்களாக கிராமங்களுக்கு கட்டப்பட்டது. அதற்கு நன்றி கூற வேண்டும்.

இதே நேரத்தில் அவற்றை திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததையிட்டும் கவலைப்பட வேண்டும். அன்று தபால் அமைச்சராக இருந்த M.L.A.ஹிஸ்புல்லாஹ் அவர்கள் இருந்த நேரத்தில் இவ் வேலைத்திட்டங்களை சிறப்பாக செய்திருக்கலாம். அன்று இருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக கட்சி பேதமான ஒரு நிலைப்பாட்டிலே கொண்டு போய் இடமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டதே தவிர கட்டப்பட்ட இடங்களில் அஞ்சல் அலுவலகங்கள் நிறுவுவதை சிறிது பிற்போட்டதனால்தான் இங்கு கட்டடங்கள் வெறுமனே இருந்து கொண்டிருக்கின்றது. அதே நேரத்தில் சம்புமடு கிராமத்திற்குமான அண்மித்த அடிப்படையில் சென்னல் கிராமமும் இணைந்து ஒன்றோடு ஒன்று இருக்கின்ற படியினால் சென்னல் கிராமம் என்று ஒரு உப அஞ்சல் அலுவலகம் ஒன்று இருக்கின்றது. உங்கள் எல்லோருக்கும் தெரியும் Sports Complex இற்கு முன்னால் இருக்கின்றது. அங்குதான் பொதுமக்கள் அந்த கொடுப்பனவை பெறுவதற்கு வருகின்றார்கள்.

சென்னல்கிராமம் உப தபால் அலுவலக நிர்வாகம் சம்புமடு பழைய அறுபது, சென்னல் கிராமம் புது அறுபது என்ற அடிப்படையில் தான் போய் கொண்டிருக்கின்றது. திணைக்களம் எப்பவும் வருமானத்தை எதிர்பார்க்கின்றது. இதே நேரத்தில் நாங்கள் இது சம்மந்தமாக புதியதொரு உப அஞ்சல் அலுவலகத்தை கேட்பது பொருத்தமாக இருக்கும். 2ம் தர அஞ்சல் அலுவலகத்திற்கு தரம் உயர்த்திய உப அஞ்சல் அலுவலமாகத்தான் சம்புமடு தபால் அலுவலகம் இருக்கின்றது. நாங்கள் இது சம்மந்தமாக திணைக்கள ரீதியாக சென்னல் கிராம Sports Complex இற்கு முன்னால் இருப்பதை இங்கு கொண்டு வந்து நிறுவ தொடங்கியவுடன் அதை அண்மித்த பகுதிகளில் அரச அலுவலகங்கள் இருக்கின்ற படியினால் அவர்கள் அது எங்களுக்கு தேவை எங்களுடைய கடித வேலைகளுக்கு மிக அவசியமாகின்றது என்று அவை அவ்விடத்தில் இருக்க வேண்டும் என்று அழுத்தப்படுத்தியதன் காரணத்தினால்தான் அதனையும் மாற்றம் செய்ய முடியாமல் போய்விட்டது. நான் அறிந்த மட்டில் திணைக்களத்தில் இருக்கின்ற 37 வருட சேவை காலத்திற்குள் அவற்றிற்கு புதியதொரு அஞ்சல் அலுவலகத்தை அவற்றிற்கு மாத்திரமல்ல மல்வத்தையில் ஒரு உப தபால் அலுவலகம் இருக்கின்றது. அது பழைய வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, பளவெளி, இஸ்மாயில்புரம் அவற்றை உள்வாங்கித்தான் அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. இன்று ஒருவர் ஒரு கடிதத்தையோ அல்லது பொதுசன கொடுப்பனவை பெற

வேண்டி இருந்தால் வளத்தாப்பிட்டியில் இருந்து மல்வத்தைக்கு வர வேண்டும். எனவே, வளத்தாப்பிட்டியில் ஒரு கட்டடம் அரச சொத்து இருக்கின்றது. அவற்றையும் புணர்நிர்மானம் செய்து அங்கு ஒரு உப அஞ்சல் அலுவலகமும் சென்னல் கிராமத்திற்கு என்ற அடிப்படையில் இல்லாமல் சென்னல் கிராமத்திற்கு என்று ஒன்று இருக்கின்றது. வேறு பெயரைக் கொண்டு அவ்விடத்தில் ஒரு உப அஞ்சல் அலுவலகத்தை அதன் புள்ளிவிபரங்களோடு நிறுவித் தருமாறு கேட்டு, பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அக்கரைப்பற்றுக்கு அவர் ஊடாக பிரதி அஞ்சல்மா அதிபதி கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைப்பதோடு எனக்கும் ஒரு பிரதியை உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் அம்பாரை மாவட்ட தபால் தொலைத்தொடர்புகள் சேவையாளர் சங்கத்தின் தலைவராக நான் இருக்கின்றேன். அதன் ஊடாக நான் இப்பகுதியில் குறிக்கப்பட்ட வேலைகளையும் செய்து கொண்டிருக்கின்றேன். அதன் செயற்குழு கூட்டத்திற்கு சென்று வந்திருக்கின்றேன். எனவே இதனை ஞாபகப்படுத்திய சக உறுப்பினருக்கும் நன்றி தெரிவித்து சபைக்கும் நன்றி கூறி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நமது காலம் மிகவும் குறுகிய காலம். 12 மாதத்திற்குள் முடிந்தால் வளத்தாப்பிட்டி கட்டடம் ஏற்கனவே கட்டடமாக இருக்கின்றது. தபால் அமைச்சுக்கு எந்த செலவும் இல்லை. 3, 4 கிராமங்கள் இருக்கின்றது. 1990ம் ஆண்டு காலத்தை ஒப்பீடு செய்யாமல் கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறியது போல் ஆடு காப்பனம் சுமகூலி முக்காப்பணம் என்ற மாதிரி 250 ரூபா என்றாலும் போய் வருவதற்கு 250 ரூபா கேட்கின்றார்கள். எனவே உடனடியாக துரிதமாக கௌரவ உறுப்பினர் அவர்கள் அதில் தலைமைத்துவமாக இருக்கின்ற படியினால் இரண்டு, ஒரு மாதத்திற்குள் இக் கட்டடத்திலே நிறுவனம் புதிதாக வரவேண்டும் அல்லது இருப்பதைக் கொண்டு மாற்றி அமைக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் இன்னுமொரு விடயத்தை கூறுகின்றேன். இருக்கின்ற காலம் போதாமல் இருக்கின்ற படியினால் சில விடயங்களை நாம் அதிகாரப் பரவலாக்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் இருக்கின்றோம். அவ்வாறு பிரித்துக் கொடுத்தால் நாங்கள் எங்களது பெறுபேறுகளை அடையலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராம தபால் நிலையத்தை பொறுத்தவரையில் அதற்கும் ஒரு சொந்தமான இடம் இல்லாமல் எமது Sports Complex இல் அமைந்திருக்கின்றது. அதற்கும் ஒரு புறம்பான தனியான இடத்தை தேடி நான் நினைக்கின்றேன் அதற்கு பொருத்தமான இடம் நீர்ப்பாசனத்திற்கு சொந்தமான வங்களாவடியில் இருக்கின்ற ஒரு துண்டுக் காணி அதை சிபார்சு செய்து அதற்காக நிரந்தரமான ஒரு இடத்தை அமைத்துக் கொடுப்பது சிறந்ததாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தபால் திணைக்களம் கட்டட நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. அதனால்தான் சம்மாந்துறை தபால் அலுவலகம் வெள்ளை அடித்து கூரையை மாற்றி இருக்கின்றதே தவிர பாராளுமன்றத்தில் இருந்து நானும் கஸ்டப்பட்டேன், கௌரவ உறுப்பினர் மன்சூர் அவர்களும் கஸ்டப்பட்டார்கள். இந்த திணைக்களத்திற்கு Capital Expenditure இல்லை. எடுத்துக் கொடுத்தால் இருப்பார்கள். கட்டடம் கட்டுகின்ற அளவுக்கு இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, உப அஞ்சல் அதிபராக இருப்பவர் கட்டடம் எடுப்பதும், அதற்கு வாடகை செலுத்துவதும் அவரது பொறுப்பு. திணைக்களத்தில் அதற்கென்று சட்டம் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தபால் அலுவலகம் சம்மந்தமாக கருத்துகள் கூறப்பட்டது. அந்த அடிப்படையில் அரசாங்கத்தினுடைய தற்போதைய கொள்கை உப தபால் அலுவலகங்களை

கட்டுவதோ அல்லது திறப்பதோ இல்லை என்ற கொள்கையில் இருக்கின்றது. அவ்வாறு இருக்கும் போது நாங்கள் இதற்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே இது தொடர்பாக தெளிவான விளக்கத்தை பெற்ற பின்னர்தான் நாங்கள் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நீண்டகாலமாக நாங்கள் புதிய வளத்தாப்பிட்டியில் உள்ள ஒரு உப தபால் அலுவலகத்தை திறப்பதற்கு எத்தி வைத்தோம். வீரச்சோலையில் ஒரு தபால் அலுவலகத்தை திறப்பதற்கு ஒரு விடயத்தை செய்தோம். இது இரண்டும் கைகூடவில்லை. இதற்கு தரப்பட்ட பதில் உப தபால் அலுவலகங்களை திறப்பது இல்லை. ஆகவே இது தொடர்பாக தெளிவான விளக்கத்தை பெற வேண்டும் என்பதை உங்களது கவனத்திற்கு எத்தி வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வியாபாரம் குறைந்த உப தபால் அலுவலகங்களை மூட வேண்டும் என்று அஞ்சல்மா அதிபதி அறிக்கை விட்டிருக்கின்றார். அந்த அடிப்படையில் மாவட்டத்தில் எங்கு மூடப்பட்டாலும் அவ் இடத்திற்கு வேறு இடம் திறக்கலாம். அதற்கு திணைக்களம் அனுமதிக்கும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, புதிய உப தபால் அலுவலகத்தை நிறுவ வேண்டிய தேவைப்பாடு இல்லை. ஏனென்று சொன்னால் தற்போது விளினியடி – 01 இல் ஏற்பட்டிருக்கின்ற தபால் நிலையம் சம்புமடு உப தபால் அலுவலகம் என்ற பெயரிலேதான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அன்று இருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக இந்த ஊரின் ஒரு அரசியல்வாதிக்கு தேவையான ஒருவருடைய மனைவி அந்த இடத்திற்கு வேலைக்கு செல்வதா என்ற ஒரு காரணத்தினால்தான் அன்று இருந்த அரசியல் அதிகாரங்களை பயன்படுத்தி இந்த உப தபால் நிலையத்தை இங்கு இடமாற்றினார். இது அப்பிரதேசத்திலே அந்த நேரம் இவ்வாறாக எழுந்து வந்து இப் பிரச்சினைகளை முன்வைக்கக்கூடிய ஒருவர் இல்லை என்ற காரணத்தினால் அப் பிரதேச மக்களை முற்று முழுதாக மழுங்கடிக்கப்பட்ட ஒரு செயல். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது. இது இடமாற்றுவது ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் முயற்சி எடுப்போம்.

**தீர்மானம் - 04/36/11**
சம்மாந்துறை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மலையடிக்கிராமம் 4ம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட உப தபால் நிலையத்தை மக்கள் பாவனைக்காக கையளிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் பிரேரணை உண்மையாக காலத்தின் தேவை. ஆனால் ஒன்று காலதாமதம் அடுத்தது அரச சட்டத்திற்கு எதிராக நாம் பிரேரணை கொண்டு செல்ல முடியாது. இது ஒரு உணர்வு பூர்வமான விடயம், இந்த சபையில் இருக்கும் பெரும்பான்மை அங்கத்தவர்களோடு சம்மந்தப்பட்ட விடயம், இந்த சமூகத்தோடு சம்மந்தப்பட்ட விடயம். ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைக்க வேண்டும் என்று கேட்டு, அதன் பிண்ணனியை விளக்கிவிட்டு அதை பேசவிட்டால் நல்லது என்று நினைக்கின்றேன். இந்த நாட்டில் Quarantine Prevention of Disease Act ஒன்று இருக்கின்றது. அந்த Original Act படி Act இன் அதிகாரங்கள்

முழு நாட்டுக்கும் Director General of Health. பிராந்தியங்களுக்கு உள்ளூராட்சி சபைகள் அல்லாவிட்டால் சுகாதார உத்தியோகத்தர்கள். கொவிட் - 19 தொற்று உருவாகியதும் அந்த சகல அதிகாரங்களையும் அரசாங்கம் அந்த சட்டத்தின் கீழ் Director of Health இற்கும் அவருக்கு கீழ் இயங்கும் MOH இற்கும் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்டு அன்று ஆரம்பத்தில் இருந்த நிலை என்னவென்றால் இதை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் MOH Director of Health. அந்தக் காலத்தில் இதில் மரணிக்கும் நபர்கள் ஒன்று அடக்கம் செய்யப்படலாம் அல்லது எரிக்கப்படலாம். அந்த முடிவை எடுக்கும் அதிகாரம் Director of Health இடம் இருக்கின்றது. அப்போது அவர் அவரின் அதிகாரத்தை பாவித்து அதை அடக்கம் செய்வதல்ல எரிப்பது என்று முடிவு எடுத்துவிட்டு பின்னர் ஏப்ரல் 11 ஆந் திகதி சுகாதார அமைச்சர் அதே சட்டத்தின் கீழ் Quarantine Act இன் 66வது சர்த்தை மாற்றி இந்த நோயினால் மரணம் அடைபவர்கள் எரிக்கப்படவே வேண்டும் என்று சட்டத்தை வர்த்தமானி மூலம் மாற்றி விட்டார்கள். அப்படியானால் எரிப்பது நாட்டின் சட்டம். நாட்டின் சட்டத்தை நாம் எதிர்த்து பிரேரணை கொண்டு செல்ல இயலாது. ஆனால் நமது உணர்வுகளை அந்தச் சட்டம் இந்த சமூகத்தை மிகவும் பாதிக்கின்றது, இந்த சமூகத்தை ஒதுக்குகின்றது.

ஒரு வழியில் சுதந்திரத்திற்கு எல்லா உரிமைகளோடும் போராடிய நாம் இன்று 73வது சுதந்திரம் கொண்டாடும் போது நமது அடிப்படை உரிமை ஒன்று மீறப்பட்ட நிலையில் கொண்டாடினோம். ஆரம்பத்தில் அந்த முடிவை எடுத்ததற்கு ஒரு நியாயம் இருந்திருக்கலாம். ஏனென்றால் கொவிட் 19 எப்படி பரவும் என்று தெரியாது. ஆனால் சுகாதார அமைப்பு இதுவும் செய்யலாம் அதுவும் செய்யலாம் என்று கூறியிருந்தது. பெரும்பாலான நாடுகள் இரண்டையும் செய்து வந்தது. ஆனால் நமது அரசாங்கம் ஒரு முடிவை எடுத்து அதில் பிடிவாதமாக இருந்தது. ஒரு வருட காலத்திற்கு பின் இப்பொழுது அந்நோயைப் பற்றி பல நிபுணர்களின் அறிவுறுத்தல்கள் விஞ்ஞானபூர்வமாக தகவல்கள் எல்லாம் இருந்தும், அதை தளர்த்தாமல் இந் நாட்டின் பிரஜைகளில் ஒரு சாராரை மனவருத்தத்திற்கு உள்ளாக்குவது நமக்கு மன வேதனைக்குரிய விடயம். அந்த விடயத்தில் எனது கருத்து உடன்பாடும் இருக்கின்றது. நாம் இந்த சபையின் உங்கள் கருத்து மூலமாக இந்த சபை இன்றைய நிலை இவ்வளவு ஆதாரங்கள் அளித்தும் நாம் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து மாற்றம் செய்யப்படுமானால் அவ் உடல்களுக்கு அடக்கம் செய்யும் வசதியை சம்மாந்துறை பிரதேச சபை கொடுப்பதற்கு தயார் என்ற செய்தியையும் கொடுக்கலாம் என்று கேட்டு கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் பிரேரணையை முன்வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த ஜனாஸா எரிப்பிற்கான எதிர்ப்புப் பிரேரணை என்பது அரசாங்கத்தை எதிர்க்கின்ற பிரேரணை அல்ல. அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு வேண்டிக் கொள்ளும் ஒரு பிரேரணையாகத்தான் இதனை நாங்கள் சமர்ப்பிக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அரசாங்கத்தை எதிர்ப்பது அல்ல, அரச சட்டத்தை எதிர்ப்பது. நாம் அரசாங்கத்தை எதிர்க்கலாம் ஆனால் சட்டத்தை எதிர்த்து சபை ஒன்று பிரேரணை எடுக்க முடியாது என்பது தான் சட்ட நிலைப்பாடு.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நான் மீண்டும் கூறுகின்றேன் அரச சட்டத்தை எதிர்க்கின்ற பிரேரணை அல்ல இது. அரசின் கவனத்தை ஈர்ப்பதும், எங்களுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்துவதற்குமான பிரேரணையாகத்தான் நாங்கள் இதனை கொண்டு வருகின்றோம். நீங்கள் கூறியிருந்தீர்கள் கால தாமதமாகிவிட்டது என்று, இல்லை. இது தொடர்ச்சியான போராட்டமாக இருந்து கொண்டிருக்கின்றது. எதிரே வருகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலே கூட இதனை முக்கிய பிரேரணையாக கொண்டுவரப்போகின்றார்கள். நாங்கள்

மாத்திரமல்ல உலக நாடுகள் பலவும் இந்த ஐக்கிய நாடுகள் சபை மூலமுமாக இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கி இருக்கின்றார்கள். அமெரிக்கா கூட ஆலோசனை வழங்கி இருக்கின்றது. அடுத்த கிழமை பாகிஸ்தான் பிரதமர் கூட இலங்கைக்கு ஆலோசனை வழங்கப்போகின்றதாக தகவல் வெளியே வந்து கொண்டிருக்கின்றன. இப்படியான சூழ்நிலையிலே பெரும்பான்மையான சிறுபான்மையாக வாழுகின்ற இந்த பிரதேச சபையிலே நாங்கள் எங்களுடைய இந்த பிரேரணையை இதுவரை காலமும் நாங்கள் நிறைவேற்றி எங்களது அரசாங்கத்திற்கு ஆதங்கங்களையும் எங்களது உணர்வுகளையும் நாங்கள் அளிக்காமல் இருந்தது உண்மையிலே நாங்கள் வெட்கப்படவேண்டிய விடயம்.

அரசாங்கம் ஒரு வர்த்தமானியிலே பிரசுரித்துவிட்டார்கள் என்பதற்காக எங்களது பேச்சு சுதந்திரத்தையோ, எங்களுடைய மனித உரிமைகளையோ நாங்கள் வெளிக்கொணராமல் நாங்கள் பெட்டிப் பாம்பாக அடங்கி இருக்க முடியாது. எங்களுடைய உணர்ச்சிகளையும், எங்களுடைய மத விழுமியங்களையும், எங்களது அடிப்படை மனித உரிமைகளையும் அரசாங்கத்திற்கு எத்தி வைக்க வேண்டும். இது மாத்திரமல்ல இதில் எத்தனையோ சிறுபான்மை மக்களின் மனித உரிமைகள் மீறலுக்கான முன்மொழிவுகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க போது நாங்கள் அரசாங்கத்தை எதிர்க்க முடியாது வர்த்தமானி பிரகடனத்தை எதிர்க்க முடியாது என வாய்மூடி மௌனிகளாக இருக்க முடியாது. எனவே இந்த உயர்ந்த சபையிலே கேட்டுக் கொள்வது இந்த விளக்கத்தைப் பற்றி நான் புதிதாக கூறவேண்டிய அவசியம் இல்லை. இது தற்போது சர்வதேச விடயமாக மாறி இருக்கின்றது. எனவே எங்களுடைய பங்களிப்பாக இந்த உயர்ந்த சபை இப் பிரேரணையை சபை அங்கீகாரத்துடன் உரியவர்களுக்காக அதாவது இந்த நாட்டின் ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும், சுகாதார அமைச்சருக்கும் அனுப்பி வைப்பதற்கு அனுமதி தருமாறு கோரி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறியதை அடியொட்டியவனாக சட்டம் மக்களுக்காகத்தான் ஏற்றப்படுவது. அது தண்டனைச் சட்டமாக இருக்கலாம், குற்றவியல் சட்டமாக இருக்கலாம், பொலிஸ் சட்டமாக இருக்கலாம், நீதிச் சட்டமாக இருக்கலாம் எந்தச் சட்டமாக இருந்தாலும் மக்களுக்காகத்தான் ஏற்றப்படுகின்றது. இன்று அரசு நடைமுறைப்படுத்தும் சட்டம் வர்த்தமானியின் ஊடாக சடலங்களை எரித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதில் நாம் முக்கியமாக உணர வேண்டிய விடயம் 20 நாள் பிள்ளையை எரிப்பதனால் கொவிட் - 19 பரவலை தடுக்க முடியுமா? என்று மன நீதிக்கு எங்களது குழந்தையாக நினைத்து நாங்கள் முடிவு எடுக்க வேண்டும். இன்றைக்கு 178 நாடுகள் அங்கீகரித்து இருக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும் ஆயிரக்கணக்கான ஜனாசாக்கள் விழுந்து கொண்டிருக்கின்றது. பிரேசிலை எடுத்துக் கொண்டாலும் சரிதான் உலகத்திலே நவீனமாக முன்னேறிய அமெரிக்காவிலும் மரணங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கு புதைக்கின்றார்கள் எரிக்கின்றார்கள். இந்து மத சட்டத்தில் எரிப்பது மேலானது என்று இருக்கின்றது. ஆனால் இந்துக்கள் கூட முஸ்லீம்களின் மையத்தை அடக்கம் செய்ய வேண்டும் என்று பாராளுமன்றத்திலும் சகல தடைகளையும் மீறி ஒவ்வொரு முஸ்லீம் பிரதேசத்தில் உள்ள சடலங்களை எரிக்கின்றார்கள் என்று அவர்கள் கூட உணர்ச்சியோடு இந்த நாட்டில் சிறுபான்மையினர்களுக்கான சட்டம் மீறப்படுகின்றது.

நாங்கள் அனேகமான ஜும்ஆக்களில் கப்ர் வேதனையைப் பற்றி கேட்டிருக்கின்றோம். கப்ரின் வேதனையில் இருந்து உலகம் அழிவதில் இருந்து எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்று நீதி நெறி தவறாமல் வாழ வேண்டும் என்றுதான் இஸ்லாம் சட்டம் கூறுகின்றது. உலகத்திலே இருக்கின்ற உரோம சட்டம், கத்தோலிக்க சட்டம் ஒவ்வொரு சட்டத்திலும் இஸ்லாமிய சட்டம் தனிச் சட்டம். அந்த சட்டத்தை அரசாங்கம் மதிக்கவில்லை. அரசை எதிர்த்து போக இயலாது. அரசாங்கம் மதிக்கவில்லை என்பதற்காக அரசாங்கத்திற்கு கட்டாயம் சுட்டிக்காட்ட வேண்டும். இது எமது உரிமை. உரிமையை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்க இயலாது. உயிர் போனாலும் பரவாயில்லை இவ் விடயத்தில் நாங்கள் மிகவும் கண்டனமான அறிக்கையை வெளிப்படுத்த வேண்டும். இல்லை என்று சொன்னால் ஊரில் ஒரு மரணம் விழுந்துவிட்டால் இஸ்லாமிய சட்டப்படி ஊரில் உள்ள ஒருவராவது அந்த மையத்தை உரிய முறைப்படி எல்லாம் செய்து அடக்கினால்

அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் பர்ளு கிபாயா என்ற கடமை நிறைவேற்றப்படும். ஆனால் யாருமே செய்யவில்லை என்றால் அனைவருக்குமே அந்த பாவம் சுமத்தப்படும். இலங்கையில் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட சடலங்கள் எரித்து கப்ரின் வேதனை என்ன என்று அறியாமல் மிலேச்சத்தனமான அதாவது உலகத்திலே இரண்டு நாடுகள் தான் எரிக்கலாம் என்று பரிந்துரை செய்து எரித்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கு நடைபெறுகின்ற கொடுமைகள் அது சொல்லில் அடங்காது.

இலங்கையிலே போர்த்துக்கேயர் ஆட்சி காலத்திலே இருந்த உஸ்மான் என்பவர் போர்த்துக்கேயரின் பணத்தை இரவில் கொள்ளையடித்து பகலில் ஏழைகளுக்கு பகிர்ந்தார்கள். அந்தக் காலத்தில் சாதி, மதம், இனம், குலம், பேதம் அனைத்தையும் மறந்து இலங்கையில் வாழ்ந்த அத்தனைபேரும் இவர்களை தேடாதீர்கள் என்று சொன்னார்கள். அந்த நேரம் ஒரு எட்டப்பன் கூட்டம் காட்டிக் கொடுத்து அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். உஸ்மான் என்பவர் இந்த மண்ணுக்கோ அல்லது வேறு எதற்குமே பயப்படவில்லை. ஏப்ரல் 21 ஆந் திகதி வருகின்ற பொலிஸ் தினத்திலும் ஒரு முஸ்லிம்தான் இலங்கையின் சுதந்திரத்திற்காக கொல்லப்பட்டார். அதை வைத்துதான் பொலிஸ் தினம் கொண்டாடப்படுகின்றது. தேசியக் கொடியை அஹமட் சின்னலெப்பை காத்தான்குடியில் இருந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர்தான் தேசியக் கொடியை கூட அலங்கரித்து இருக்கின்றார். இப்படி எவ்வளவோ உதவியை செய்த, இந்த நாட்டுக்காக தியாகம் செய்த எங்களை மரணத்தின் பின்னர் எரிப்பது என்பதை நாங்கள் இந்த சபையில் இல்லாமல் போனாலும் சரி, கைது செய்யப்பட்டு தூக்குத் தண்டணைக்கு போக வந்தாலும் சரி இதை எதிர்த்தே ஆக வேண்டும். இப் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் என்று மிகவும் தாழ்மையாக இந்த சபையில் எனது கருத்தை வெளிப்படுத்தி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு ஜனாசா சம்மந்தமாக ஒவ்வொருவரினுடைய அபிப்பிராயங்களை கூறுகின்ற விடயத்தில் உண்மையிலே எங்களுடைய மரணத்தின் பின்பு எங்களது ஜனாசாக்களை நல்லடக்கம் செய்ய வேண்டிய நிலையில் அது மீறி ஜனாசாக்களை எரிக்கின்ற போது அது மார்க்கத்தின் அடிப்படையில் ஹராமான விடயம். எங்களுடைய மார்க்கத்தில் பிழையான விடயம். ஆனால் ஏனைய மதத்தவர்களுக்கிடையில் சர்வசாதாரணமானது. அவர்களுடைய விடயத்தில் புதைக்கின்ற விடயமும் இருக்கின்றது, எரிக்கின்ற விடயமும் இருக்கின்றது. உதாரணமாக எங்களுடைய தவிசாளர் அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஒரு தவிசாளராக நியமிக்கப்பட்டதற்கு பின்னர் நான் ஒரு நிர்வாகி என்று பல தடவை மக்களுக்காக நிர்வாகம் செய்வதற்காக வந்திருக்கின்றேன். அரசியல் செய்வதற்காக வரவில்லை என்று கூறுவார். அதே போல் எல்லோரும் நிர்வாகியாக இருப்பார்கள் என்று கூற முடியாது. அரசாங்கம், அரசியல் என்கின்ற விடயத்தில் அரசியல் தலைமைத்துவங்கள் சொல்லுகின்ற விடயத்தைத்தான் அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்றது. அதையும் எம்மால் மறுக்க முடியாது. அரசாங்கம் என்று அந்த தலைவர் என்ன சொல்கின்றாரோ அதைத்தான் பின்பற்ற வேண்டும்.

இங்கு நடக்கின்ற விடயம் அரசியல். எங்களது எதிர்காலம் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான இப்போது எங்களுக்கு மக்களால் பெரும்பான்மை சமூகத்தினால் அளிக்கப்பட்ட வாக்குகளை கட்டிக் காக்க வேண்டும் என்பதற்காக எங்களது சிறுபான்மை சமூகத்தின் வாக்குகள் தேவை இல்லை என்ற நோக்கத்திற்காகத்தான் அவர்களுடைய அந்த அடிப்படையில் போய்க் கொண்டிருக்கின்றது. அதே நேரத்தில் எங்களுடைய முன்னாள் பாராளுமன்ற வேட்பாளர்கள் பிரச்சாரத்தின் போது எங்களுடைய ஜனாசாக்கள் எரிக்கப்படுகின்றது, எங்களுடைய காணிகள் சுவீகரிக்கப்படுகின்றது. இதனை பேசுவதற்கான அனுமதியை தாருங்கள் என்று இனவாதங்கள் பேசி வென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் இந்த மாவட்டத்தில். இந்த மாவட்டத்தில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அதாவது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரசை சேர்ந்தவர்கள் இங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் 20வது சட்டத்திற்கு கை உயர்த்தும் போது இந்த நிபந்தனை வைத்திருக்க வேண்டும். வாக்களித்த மக்களிடம் பிரச்சாரம் செய்த, மக்களிடம் இனவாதத்தை தூண்டியதற்கு அந்த வசனத்திற்கு அமைவாகத்தான் இந்த மக்கள் வாக்களித்தார்கள் எங்களுடைய ஜனாசாக்களை பாதுகாக்க

வேண்டும் என்பதற்காக, ஆனால் அங்கே 20 இற்கு கையை உயர்த்தும் போது அந்த நிபந்தனை எதுவும் இல்லை. இவர்கள் உண்மையான முஸ்லீம்களாக எங்களுடைய சமூகத்தின் விழுமியங்களை பாதுகாக்கக் கூடிய பாராளுமன்ற மக்கள் பிரதிநிதியாக இருந்திருந்தால் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் முஸ்லிம் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு இடத்திற்கு அழைத்து ஒரு மசூராவின் அடிப்படையில் 20 இற்கு நாங்கள் வாக்களிக்க வேண்டுமானால் எங்களுடைய நாட்டின் ஜனாசா எரிப்பு சம்மந்தமாக, காணி சுவீகரிப்பு சம்மந்தமாக 2 நிபந்தனைகளையும் வைத்து ஜனாதிபதி அவர்களிடம் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். அதற்கு பிறகு நாம் எங்களுடைய 20 இற்கு ஆதரவளிக்கின்ற விடயம் சம்மந்தமாக யோசிப்போம் என்று மசூரா செய்ய வேண்டும். தற்போது இவர்களது பெயர் என்னவென்று தெரியுமா பைசால் காசிம் MP என்று தெரியாது, ஹரீஸ் MP என்று தெரியாது, முஷர்ரப் MP என்று தெரியாது. விஸ்ஸ கட்டி 20 இற்கு வாக்களித்தவர்கள். இதற்கு பிறகு கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பாராளுமன்ற முஸ்லிம் MP களை அழைத்து ஏசி இருக்கின்றார். நீங்கள் 20 இற்கு கையை உயர்த்தும் போது ஒரு நிபந்தனையை ஏற்றுங்கள் மஹிந்த அல்ல ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ. அவர் முன்னிலையில் ஏன் உங்களது தேவைகளை நிபந்தனையாக வைக்கவில்லை என்று கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எங்களுடைய பாராளுமன்றத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏசி அனுப்பி இருக்கின்றார்கள். இது ஒரு அரசியல் மாயை. நாம் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

நானும் கொரோனாவினால் மரணித்தால் எரிக்கப்படத்தான் போகின்றேன். எனது சகோதரர்களும் எரிக்கப்படத்தான் போகின்றார்கள். அது உண்மையான விடயம். அதில் நான் மிகவும் கவலைப்படுகின்றேன். ஆனால் எங்களுடைய சமூகம் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை என்ற பழிவாங்கல் தான் இது வேறு ஒன்றும் இல்லை. நாம் இன்னும் இன்னும் அரசாங்கத்தை விமர்சனம் செய்வதற்கு நாம் முயற்சிப்பதை விட எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகத்தான் இப் பிரச்சினைகளை பார்க்க வேண்டும். எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய ஜனாதிபதியோ அல்லது அதற்குரிய அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் நாம் இந்த சபையில் பேசுவதை எந்த கண்டனமும் தெரிவிக்க முடியாது. அந்தப் பாராளுமன்றத்தில் எங்களுடைய பிரதிநிதிகளின் குரல்கள் ஒலிக்கப்பட வேண்டும். அதன் பின்னர்தான் இதற்கான முடிவுகளை கண்டறியலாம். எங்களுடைய சமூகத்தை பாதுகாப்பதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்வின் நாட்டப்படி அது நடக்கின்றது. எங்களுக்கு இந்த 05 வருடமும் சோதனையான காலம் எங்களுடைய சமூகத்திற்கு. பர்மாவில் முஸ்லிம்களை உயிரோடு எரித்தார்கள். எந்த நாடு தலையிட்டு என்ன நடந்தது. அந்தந்த நாட்டுக்குள் இருக்கின்ற அரசியல் பிரமுகர்கள் ஊடாகத்தான் எங்களுடைய தேவைகளை பூர்த்தியாக்கலாம் என்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்தவனாக, கொவிட் சம்மந்தமாக இருக்கின்ற அரசாங்கத்தின் கெடுபிடிகள் பற்றி நாங்கள் விமர்சிக்க தேவையில்லை. எல்லோரும் அனுபவித்திருக்கின்றோம். ஆனால் உள்ளூராட்சி மன்ற இந்த உயர்ந்த சபையானது சபைக்கு என்று சட்டதிட்டம் இருக்கின்றது. பாராளுமன்றத்திற்கு என்று வேறான சட்டதிட்டங்கள் இருக்கின்றது. இது அரசாங்கத்தில் அரசியலோடு சம்மந்தப்பட்ட இந்த பிரச்சினையை நாங்கள் இன்று முன் எடுத்திருக்கின்றோம். நீண்ட காலத்திற்கு பின் சமூகமளித்த கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களது முன்மொழிவு எந்த அடிப்படையில் இருந்தாலும் இப் பிரேரணையை ஆதரிக்கத்தான் வேண்டும். இஸ்லாத்தில் யாரும் குறை காணமுடியாது. ஆனால் முஸ்லிம்களில் குறை காணலாம். இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்ட ஒரு மார்க்கம். அல்லாஹ்வை தவிர யாருக்கும் நாம் அஞ்ச வேண்டியதும் இல்லை. கெஞ்ச வேண்டியதும் இல்லை. அவனிடம் மாத்திரம் நாங்கள் துஆ கேட்டு எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும். இருப்பினும் நாடு என்ற அடிப்படையில் எங்களது இனங்களை நிர்வகிக்கின்ற கட்சியைக் கூறிக் கொண்டு சிறுபான்மை கட்சிகள் இன்று எடுத்திருக்கின்ற நீண்ட காலமாக 1983 ஆம் ஆண்டின் பிற்பாடு மேற்கொண்டு வந்த இனவாத போக்கின் காரணத்தினால் இன்று நாங்கள் சாம்பலாகிக் கொண்டிருக்கின்றோம். அதை யாரும் மறக்கவும் முடியாது

மறுக்கவும் முடியாது. இவ் இடத்தில் ஞாபகப்படுத்த வேண்டும் மர்ஹூம் M.A.அப்துல் மஜீட் அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்த காலத்தில் சொன்னார். அல்லாஹ் எங்களுக்கே தெரியாத காலத்தில் பெரும்பான்மை மக்கள் பேரினவாதத்தை செய்ய தொடங்கினால் இதெற்கெல்லாம் நின்று பிடிக்கமாட்டார்கள் என்று சொன்னார். இன்றைக்கு எல்லாம் செய்து முடித்து சாம்பல் எடுப்பது என்றால் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த நிலைக்கு கொண்டு வந்தவர்கள் நாங்கள். இனவாதத்தை தூண்டியவர்கள் நாங்கள். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் தேசிய கட்சி ஒன்றில் அவர் வென்றோலோ, தோற்றாலோ அவர் ஒரு வேட்பாளராக வந்ததையிட்டு நான் சந்தோசப்படுகின்றேன், பாராட்டுகின்றேன்.

நாங்கள் இந்த நிலையில் இருக்கின்ற போது எல்லாவற்றையும் செய்துவிட்டு தற்போது ஒன்றும் தெரியாதது போன்று ஒழித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களுக்கு இந்த சபை ஊடாக நன்றி தெரிவிக்க வேண்டும். அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கதிரையில் தூங்கிக் கொண்டிருந்த சிறுபான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த மக்களின் உரிமைகளை வென்றெடுக்கச் சென்றவர்கள் அன்றுதான் கண்ணை விழித்து பார்த்தார்கள். அதன் பிற்பாடுதான் பாதைக்கு வந்தார்கள். யாழ்ப்பாணத்தில் கட்சி பேதமற்ற முறையில் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்களின் ஜனாசா எரிப்பிற்காகவேண்டி ஊர்வலம் சென்று எதிர்ப்பை தெரிவித்தார்கள். எமது அம்பாரை மாவட்டத்தில் முழுதாக முஸ்லிம் மாவட்டமாக இருக்கின்ற பிரதேசங்களில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்கே? நாங்கள் எல்லோரும் அரசியல் தெரிந்தவர்கள். தொடர்ந்து எங்களை ஏமாற்ற முடியாது. கடந்த ஆட்சி காலத்தில் நல்லாட்சியில் அதிகாரம் ஜனாதிபதிக்கு அரைவாசி, பிரதம மந்திரிக்கு அரைவாசி. அதனால் பல தவறுகள் நாட்டில் ஏற்பட்டது. அதை விமர்சித்தார்கள்.

ஆனால் இன்று தனிப்பட்ட சுகபோகங்களுக்காக 20வது சட்டத்திற்கு வாக்களித்து விட்டு அவர்கள் இருந்த கட்சியைகூட கவனிக்காமல் வாக்களித்துவிட்டு இம் மாவட்டத்திற்குள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் எங்கே? இவர்கள் தான் பேச வேண்டும். இந்த சபையில் முடிந்தால் ஒரு பிரேரணையை வெளிக் கொண்டு வந்து நாங்கள் வெளிப்படுத்த வேண்டும். ஆனால் இந்த சபை கூட இவ்வளவு காலமும் இது சம்மந்தமாக எந்தவிதமான ஒரு கரிசணமும் அற்றுதான் இருந்தது. இந்த சபையில் இந்த சம்பவத்தை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி ஒரு உணர்வு பூர்வமான எமது கௌரவ உறுப்பினர்கள் இருந்தால் பாதையில் சென்று கறுத்தப்பட்டியை அணிந்து அல்லது வெள்ளைச் சீலையை அணிந்து இனத்திற்காக தங்களது மத உரிமைக்கான தேவைகளை கேட்கலாம். இன்றைக்கு சம்மாந்துறையில் மர்ஹூம் இப்ராஹீம் அதிபர் அவர்களின் ஜனாசா இன்றும் கூட இருந்து கொண்டிருக்கின்றது. அவரது அடுத்த வழக்கு 14ம் திகதி நடைபெறப்போகின்றது. இதைப்பற்றி இவ் ஊரோ அல்லது உலமா சபையோ அல்லது நாம் மக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற இந்த சபையோ இதைப் பற்றி ஞாபகப்படுத்தவில்லை. அந்தளவு அடக்கு முறைக்கு உள்ளாக்கப்படுகின்ற முறையில் இந்த நாட்டின் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் நாம் தேசிய கட்சிகளோடு இணைந்து செயற்பட வேண்டும். தேசிய கட்சி கொள்கைக்கு அமைவாக செயற்பட வேண்டும். இது இத்தோடு நின்றுவிடவில்லை. மதரசாக்கள் இல்லாமல் போகப்போகின்றது. உலமா சபை கலைக்கப்பட வேண்டும் என்று பிரபல்யமாக ஊடகங்களில் பேசப்படுகின்றது. எங்களது நிலங்கள் சுவீகரிக்கப்படுகின்றது. வளத்தாப்பிட்டியில் நிலம் சுவீகரிக்கப்படுகின்றது என்றால் அதற்கு இன்று யாரும் பொறுப்பு கூற முடியாது. அன்று இனவாத ரீதியான கட்சியை கொண்டு வந்தவர்கள்தான் பொறுப்பு கூற வேண்டும். ஏனென்றால் இணைந்த பல்கலைக்கழக கல்லூரியை மர்ஹூம் எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்கள் கொண்டு வந்து தற்காலிகமாக இடம் இல்லை என்பதற்காக தொழில்நுட்ப கல்லூரி கட்டடத்தில் நிறுவினார். அதன் அடுத்த வடிவம் இணைந்த பல்கலைக்கழகமாக அப்புறப்படுத்தப்படும் என்று அந்த ஊர் மக்களுக்கு அந்த நேரத்தில் செய்தியை வெளியிட்டார். அந்த பல்கலைக்கழகம் வளத்தாப்பிட்டியில்தான் அமைப்பதற்கு கங்கணம் கட்டிக் கொண்டு இருந்தார். அந்த நேரத்தில் இந்த ஊரில் படித்தவர்கள் இருக்கின்ற பிரதேசத்தில் மடையர்களாக்கி மடத்தனமான வேலைகளை

பார்த்து சுக போகங்களுக்காக எங்கே சென்றுவிட்டது. அன்று எடுத்த முடிவு வளத்தாப்பிட்டியில் அந்த பல்கலைக்கழகம் அமைந்திருந்தால் நில சுவீகரிப்பு வராது. நாங்கள் தான் தவறு செய்தவர்கள் 20 இற்கு நாங்கள் வாக்களித்து விட்டோம். 20 இற்கு முன்னர் ஜனாசாக்கள் எரிக்கப்படவில்லை. அதன் பிற்பாடுதான் சுயநலங்களுக்காக கையெழுத்தை போட்டுவிட்டு 20 இற்கு பின்னர் நீங்கள் எரிக்கின்றார்கள் என்று கதறுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. 20 இற்கு அதிகாரத்தை கொடுத்தால் அத்தனைக்கும் அடிபணிய வேண்டும். ஒரே நாடு ஒரே சட்டம். ஆனால் இஸ்லாம் தனித்துவமானது. முஸ்லிம்களின் கலாசாரம் தனித்துவமானது. பண்பாடு தனித்துவமானது. எங்களது தாய் மொழி தமிழ். எங்களது இரு கண்கள் ஒன்று மார்க்கம் அடுத்தது மொழி. இரண்டையும் விட்டுக்கொடுப்பதற்கு தயாரில்லை. இருப்பினும் இன்றய சூழ்நிலையில் தமிழ் சகோதரர்கள் எங்களுக்கு உதவுகின்றார்கள். எங்களது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை விட சர்வதேச மட்டத்தில் உதவி செய்கின்றார்கள். அவர்களுக்கு நாம் நன்றிக் கடன் செலுத்த வேண்டிய அடிப்படையில்தான் செயற்படலாம். நாங்கள் முஸ்லீம்கள் தனித்துவமானவர்கள் என்பதை இந்த சபையின் உரை மூலம் கோடிட்டுக் காட்டுகின்றேன். இத்துடன் எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நாங்கள் தற்போது பிரேரணையை கொண்டு செல்வதா? இல்லையா? என்பதுதான் முடிவு. 1000 வாக்குகளால் வந்தாலும் சரி 200 வாக்குகளால் வந்தாலும் சரி நாம் மக்கள் பிரதிநிதி. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் இதற்கு என்ன முடிவு எடுப்பது என்பதை கௌரவ தவிசாளர் அவர்கள் கூற வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று உரைக்கப்பட்ட கௌரவ உறுப்பினர்களின் உரையை உள்வாங்கியவளாக, சென்ற சபையில் ஜனாசா எரிப்பு சம்மந்தமாக கதைக்கப்பட்டு அதில் இந்த உயர்ந்த சபையில் இருக்கின்ற கௌரவ தவிசாளர் அவர்களும், கௌரவ உறுப்பினர் அவர்களும் இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம்களின் ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு இந்த உயர்ந்த சபை அனுமதி கொடுத்த சபைதான். ஆகவே நாங்கள் இங்கு இருக்கின்ற 20 பேரும் இந்த ஜனாசா எரிப்பிற்கு எதிர்ப்பை வழங்கி அடக்குவதற்கு ஆதரவு வழங்கியவர்கள். அதை நாம் முதலில் மனதில் எடுத்துக் கொண்டு நாங்கள் எங்களது உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது. எங்களுடைய மதத்தையும் விட்டுக்கொடுக்கக் கூடாது. ஆனால் எங்களுடைய நோக்கம் நாங்கள் அவர்களுக்கு எங்களுடைய மதம் மதம் என்று இனவாதத்தை தூண்டாமல் எங்களுடைய காரியங்களை வென்றெடுக்க வேண்டும் என்ற நிலையில் எங்களுடைய இந்த ஊர் மக்களின் முஸ்லிம் சமுதாயங்களின் மன நிலையை அங்கீகரித்து எங்களுக்கு ஜனாசா எரிப்பின் ஊடாக எங்களுடைய மனோ நிலை எவ்வாறு இருக்கின்றது எங்களது குடும்பத்தின் மனோ நிலை எவ்வாறு இருக்கின்றது, எங்களது சமூகத்தின் மனோ நிலை எவ்வாறு இருக்கின்றது. அதை நாங்கள் அவர்களுக்கு தெளிவுபடுத்தி நாங்கள் ஒரு பிரேரணையை வழங்கலாம் என்று கூறி முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் மாஹிர் சேர் அவர்களின் பிரேரணையை உள்வாங்கியவளாகவும், இப் பிரேரணையின் நோக்கம் முஸ்லிம்கள் கொவிட் - 19 இனால் மரணிப்பவர்களின் ஜனாசாக்களை எரிப்பதற்கு எதிர்க்கின்ற பிரேரணையாகத்தான் இருக்கின்றது. இப் பிரேரணையை கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறியது போல் காலதாமதமாக கொண்டுவரப்பட்டாலும் எல்லோரினுடைய சம்மதத்துடனும் இப் பிரேரணையை அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு கொண்டுசெல்லக்கூடிய அளவில் எங்களது சபை மூலம் இப் பிரேரணையை அனுப்பி வைக்குமாறு மிகவும் பணிவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு முன்வைக்கப்பட்ட ஜனாசா எரிப்பு விடயம் உண்மையாக முஸ்லிம் என்ற வகையில் இந்த சபையிலே உள்ள நாங்கள் இப் பிரேரணையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று இந்த நாட்டிலே இடம்பெற்றுக் கொண்டிருப்பது எதற்காக? எமது ஜனாசாக்கள்

எரியூட்டப்படுகின்றது என்பதை உற்றுநோக்குவோமாக இருந்தால் எங்கள் முஸ்லிம் சமூகத்தை அரசியல் பகடக்காயாக பாவிப்பதற்காக இந்த நாட்டிலே உள்ள பல்வேறு சமூகங்கள் இந்த ஜனாசா எரிப்பு சம்மந்தமாக எத்தனையோ சுகாதார நிபுணத்துவக் குழுக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அறிக்கைகளை சமர்ப்பித்தும் கொவிட் 19 இனால் மரணிக்கின்ற சடலங்களை எமது மார்க்கத்தின் படி நல்லடக்கம் செய்யலாம் அல்லது பிற மார்க்கங்களின்படி புதைக்கலாம், எரிக்கலாம் என்கின்ற எத்தனையோ தகவல்களை வழங்கியும் இன்று இந்த நாட்டிலே எமது ஜனாசாக்கள் எரிக்கப்படுகின்றது என்றால் உண்மையாக இதன் விஸ்பரூபம் மறு உருவம் வேறு. எமக்கு வாக்களித்த மக்களை அல்லது நாம் மீண்டும் மீண்டும் அரசியல் அரியாசனத்தில் ஏற வேண்டும் என்கின்ற பெரும்பான்மை மக்களின் உள்ளத்தில் குடிபுகுந்து இருக்கின்ற இனவாதம் என்கின்ற கொடிய நோய். இந்த நோயின் காரணமாகத்தான் இன்று பல சட்ட வல்லுனர்களின் சட்ட வரையில் ஜனாசா எரியூட்டப்படுகின்றது.

எனவே இங்கு நாங்கள் பேசுகின்ற போது இந்த சபையிலே சில கௌரவ உறுப்பினர்கள் பேசினார்கள். உண்மையாக அரசியலுக்கும், எங்களது மத விழுமியங்களும் வேறு. ஒரு மனிதனுடைய இறுதிக்கிரிகை தான் ஜனாசா நல்லடக்கம். நாம் இந்த உலகத்தில் வாழ்வதற்காக வந்தவர்கள் அல்ல. எங்களுடைய நீண்டகால வாழ்க்கைக்காக வாழ்க்கையை தயார் செய்வதற்காக இந்த உலகத்திற்கு வந்தவர்கள். எங்களுடைய மரணத்தின் பின்னர்தான் நீண்ட கால வாழ்க்கை இருக்கின்றது. எனவே இங்கு எல்லோரும் அவரவர்களுடைய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அல்லது அவர்களுடைய எதிர்காலங்களுக்கு ஏற்றவாறு அவர்களுடைய வாழ்க்கையை அமைக்க வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளலாம். ஆனால் யார் எதற்காக எதை செய்தாலும் எல்லாவற்றையும் இந்த அதிகாரங்களையும் அளித்து, எங்களுக்கு இந்த அரசியல் அதிகாரங்களையும் அளித்தவர்களை எல்லாவற்றுக்கும் எல்லோரையும் கவனித்துக் கொண்டிருப்பவன் வல்ல இறைவன். யார் எதைச் செய்தாலும் செய்வதற்குரிய தண்டனையும் எதற்காக இதை செய்கின்றார்கள் என்பதற்குரிய கூலியையும் பெற்றுக் கொள்ளக்கூடிய காலம் இருக்கின்றது. நாளை மஹ்ஷர் நாளிலே அவர் பௌத்த மதத்தவராக இருந்தாலும் சரி, இந்து மதத்தவராக இருந்தாலும் சரி, முஸ்லிமாக இருந்தாலும் சரி எந்த சமூகத்திற்கு எதிராகவோ அல்லது அநீதியையோ அல்லது ஒரு அபாண்டமான பழியையோ சுமத்துபவர்களாக இருந்தால் அதற்கான தண்டனை மறுமை நாளில் நிச்சயமாக அனுபவித்தே ஆக வேண்டும்.

இதற்காக நாங்கள் ஒருவரை ஒருவர் முட்டிக் கொண்டு ஒருவருடைய கருத்திற்கு புறம்பாக ஒருவர் கருத்தை பேசிக் கொண்டு தாங்கள் ஒரு எதிர்கால ஒரு அரசியலை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த சபையினை பயன்படுத்தவோ அல்லது இந்த ஊரை பயன்படுத்தவோ முடியாது. ஆனால் இந்த ஊரில் பிறந்த மக்கள் சிறுபான்மை, பெரும்பான்மை வாழுகின்ற ஊர் என்ற படியால் இந்த விடயத்தை செய்திருக்க வேண்டும். இதில் இருக்கின்ற ஒரு அம்சம் என்னவென்றால் இந்த சபையிலே இருக்கின்ற 20 பேரும் ஜனாசா எரிப்பில் குரல் கொடுப்பதில் எந்த பிரயோசனமும் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. எங்களை விட மிக முக்கியமானவர்கள் இருக்கின்றார்கள். கல்விமான்கள் இருக்கின்றார்கள், புத்திஜீவிகள் இருக்கின்றார்கள், முச்சபைகள் இருக்கின்றது. அண்மையிலே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மன்சூர் அவர்களுடைய ஒரு பதிவனை பார்த்திருந்தேன் ஜனாசா எரிப்பு விடயம் சம்மந்தமாக, தான் முன் நின்று ஒரு எதிர்ப்பை தெரிவித்தால் இந்த ஊரினுடைய அரசியலாக மாறிவிடும். மொத்தமாக ஊர் சேர்ந்து செய்வோம் வாருங்கள் என்று முச்சபையை வேண்டிய போது அதற்கு முச்சபையினால் எந்தவிதமான முடிவும் வழங்கப்படவில்லை. ஊரை வழிநடத்தக்கூடியவர்கள் இந்த முச்சபையினர். பிரதேச சபை உறுப்பினர்கள் அல்ல. இவர்கள் இதற்காக முன்வர வேண்டும்.

இன்று எங்களுடைய கௌரவ உறுப்பினர் அவர்கள் இந்த பிரேரணையை முன்வைத்திருக்கின்றார் என்றால் இதற்கு முன்பே இந்த ஊரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்ற முச்சபையினர் இதற்கு ஒரு முடிவை எடுத்திருக்க வேண்டும். முச்சபை செய்தால் ஊர் செய்வதற்கு சமன். ஒரு உறுப்பினர் செய்தால் அரசியலுக்காக அவர் செய்ததாக ஏற்றுக் கொள்ளப்படும். ஒட்டுமொத்த அரசாங்கத்திற்கும் அவர் சித்தரிக்கப்படுவார். நாங்கள் இந்த பிரேரணையை நிறைவேற்ற வேண்டும்

என்பதற்கு மாற்றுக்கருத்துக்கு இடம் இல்லை. ஆனால் இந்த சபை மாத்திரமல்ல இந்த ஊர், முச்சபைகள், ஊரிலே உள்ள அரசியல் பிரமுகர்கள், ஊரிலே உள்ள புத்திஜீவிகள், கல்விமான்கள் எல்லோரும் ஒன்றாக நின்று இப் பிரேரணையை நிறைவேற்றி இந்த நாட்டினுடைய அரசாங்கத்திற்கு எமது அழுத்தத்தை தெரிவிக்கலாமே தவிர எங்களுடைய முடிவு இதுதான் என்று திணிக்க முடியாது.

ஏனென்றால் அரசியல் அதிகாரங்களின் ஊடாக கொவிட் 19 மரணத்தை வைத்து இன்று எங்களை உதாரணமாக முஸ்லிம் சமூகத்தை அடகு வைத்து பல்வேறு தரப்பட்ட சமூக அரசியல் பிரதிநிதிகள் இன்று அவர்களுடைய எதிர்கால அரசியலை செய்வதற்காக பாதைக்கு வெளி இறங்கி இருக்கின்றார்கள். இங்கு இருக்கின்ற கௌரவ தமிழ் உறுப்பினர்கள் மன்னிக்க வேண்டும். இன்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களோ, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களோ முஸ்லிம் சமூகத்திற்கு ஆதரவாக குரல் கொடுக்க முடியுமாக இருந்தால் அன்று இந்த நாட்டிலே ஏற்பட்ட அந்த வன்முறை அடக்குமுறை கலவரங்கள், காத்தான்குடி பள்ளிவாசலிலே முஸ்லிம்கள் தொழுது கொண்டிருந்த போது தமிழ் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்ட போது இந்த சமூகத்திற்கு எதிராக எத்தனையோ அடக்குமுறைகள் நிறுத்தப்பட்ட போது எங்களுடைய பச்சிளம் பாலர்களை கையில் ஏந்தியவாறு நாங்கள் இந்த அகதி முகாம்களிலே இருந்த போது அன்று இருந்த அரசியல் தலமைகள் இந்த சிறுபான்மை சமூகங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று எண்ணியிருந்தால் இன்று இந்த பிரச்சினை வந்திருக்க முடியாது.

தனித்துவமான கட்சிகளினால்தான் இனவாதம் வந்தது என்றார்கள். எதற்காக தனித்துவமான கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாட்டிலே இருந்த முஸ்லிம்கள் இவ்வாறான சந்தர்ப்பம் ஏற்பட்ட போது தவறான பாதையில் சென்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் பெருந்தலைவர் அஷ்ரப் அவர்களினால் அந்த இயக்கத்தை ஆரம்பித்து இன்று ஒட்டுமொத்த முஸ்லீம் சமூகத்தையும் இளைஞர்களையும் அவர்களுடைய மேற்பார்வையிலே வைத்துக் கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பம் எவ்வாறு அமைகின்றதோ அதற்கு ஏற்றவாறுதான் தலைமைத்துவங்களும் வழி நடத்த வேண்டும். யாரையும் குறை கூறத்தேவையில்லை. முதலாவது ஜனாசா எரிக்கப்பட்ட போதே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்கள் அவர் சார்ந்த சட்டத்தரணி ஊடாக நீதி மன்றத்திலே வழக்குத் தாக்கல் செய்தார். அன்று இந்த சமூகம் அவரை ஒரு கோழைத்தனமாக பேசியது. எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, ஜனாசா எரிக்கப்படுவது என்பது எங்களது அடிப்படை உரிமையை மீறுகின்ற ஒரு செயல். அதற்கு எதிரான ஒரு கண்டனத்தை நாங்கள் ஆட்சியாளர்களுக்கு தெரிவிக்க வேண்டுமே தவிர எங்களுடைய முடிவு இதுதான் என்று தீர்மானிக்க முடியாது என்பதுதான் எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஜனாசா எரிப்பு என்பது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதற்கு நாங்களும் பல முறைகள் ஒவ்வொருவரும் எங்களது ஒவ்வொரு மாத கூட்டறிக்கையிலும் வந்து கொண்டிருக்கின்றது. ஜனாசா எரிப்பை எப்போது தடுத்திருக்க வேண்டும் என்றால் எமது சம்மாந்துறையில் மர்ஹூம் இப்றாஹீம் ஆசிரியர் அவர்கள் மரணித்து ஜனாசா எரிக்கப்படப்போகின்றது என்று இன்னும் AMH இல் இருந்து கொண்டிருக்கின்றது. அந்த நேரத்தில் எதிர்ப்பை தெரிவித்திருக்க வேண்டும். அன்று எங்களது அமைச்சர் மர்ஹூம் M.H.M.அஷ்ரப் அவர்கள் தனிப்பட்ட கட்சியை உருவாக்கியதால்தான் முஸ்லீம்கள் இருக்கின்றார்கள் என்று நாட்டுக்கு தெரிய வந்தது. தனிப்பட்ட கட்சி பேதம் என்பதை இன்றில் இருந்து சகலரும் மறந்து விட வேண்டும். கௌரவ உறுப்பினர்களே, நான் ஒரு உறுப்பினராக இல்லாமல் கேட்டுக் கொள்கின்றேன். ஒரு முஸ்லிம் என்ற ரீதியில் நீங்கள் முதலில் இனவாதம், கட்சி பேதம் எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். உங்கள் உள்ளங்களை பலப்படுத்த வேண்டும் என்று இறைவனினால் உருவாக்கப்பட்டதுதான் இந்த ஜனாசா எரிப்பு. உங்கள் ஈமானை எப்போது பலப்படுத்துகின்றீர்களோ அன்றைக்கு இது வெற்றியடையும். இதை விட்டுவிட்டு எல்லோரும் ஊர்வலம் போகின்றார்கள், ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள் எங்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? 20வது சட்டத்திற்கு ஒப்பமிடாவிட்டால்

மடையர்களால்தான் ஒப்பமிடாதால்தான் ஜனாசா எரிக்கப்படுகின்றது. இப்போது ஒப்பமிட்டு விட்டார்கள் எரிக்கப்படுகின்றது. மனிதன் வாழ்ந்தாலும் கஸ்டம் தாழ்ந்தாலும் கஸ்டம். ஹஸ்புனல்லாஹு வனி.்.மல் வக்கீல் வனி.்.மல் மவ்லா வனி.்.மல் நஷீர் என்று அடிக்கடி ஓதிக் கொள்ளுங்கள். இதன் பெறுமதியில் தான் நமக்கு பெரிய ஆயுதம் இருக்கின்றது. பொறுமையைக் கொண்டு தேடுங்கள். நாம் போராடுவதற்கு ஆயுதம் ஏந்தியோ அல்லது போர் கொடியையோ ஏந்தி வெற்றியடைவது என்பது நிச்சயமாக நடக்காது. ஏனென்றால் தாக்க வேண்டும் என்று எதிரி தொடங்கி விட்டார். நாம் ஓட வேண்டும் என்று நினைத்தோம் என்றால் பிழை. திரும்பி நாங்கள் நின்று தாக்கக்கூடிய ஆயுதம் தான் எங்களது கலிமா. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பட்ட துயரத்தில் நாங்கள் ஒரு துளிகூட படவில்லை. இதை நாங்கள் எல்லோரும் முதலில் கவனம் செலுத்த வேண்டும். உலமா சபையோ அல்லது முச்சபையோ அல்லது மற்றவர்களை ஏசுவதை விட்டுவிட்டு அவர்களின் குறைகளை நீங்கள் ஆராயாமல் உங்களுக்கு பின்னால் குறைகள் என்ன என்பதைப்பற்றி பார்க்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மனித இனத்திற்காக உருவாக்கப்பட்டதுதான் ஐ.நா, யுனிசெப், யுனிஸ்கோ, சார்க், WHO அமைப்பு. நாங்கள் இந்த அரசை வென்று வந்து எங்களுடைய மார்க்க ரீதியான ஒரு அணுகு முறையாக இருந்தாலும் அதற்காக மட்டும் இல்லாமல் இந்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் அந்த விதிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் எமக்கான ஒரு பாதுகாப்பு இல்லாமல் உலகமே அழிந்துவிடும் என்பதுதான் எனது கருத்து. ஆகவே இந்த தீர்மானத்தை உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்கள் எல்லோரினுடைய கருத்துக்களை உள்வாங்கியவனாக, நான் ஒன்றை மிகவும் தெளிவாக உங்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். முதன் முதலாக இந்த எதிர்ப்புக்கு மாற்று வழி இருக்க வேண்டும் என்று முடிவு எடுத்தது இந்த சபை. இந்த சபையினால் சம்மாந்துறையில் நாங்கள் அடக்கம் செய்வதற்கு தயார் என்ற முயற்சியை எடுத்து எல்லோரையும் கூட்டி முடிவு எடுத்து இந்த சபையில் ஒரு பிரேரணை நிறைவேற்றியவர்கள். சில விடயங்களில் சிலர் தொடர்ந்து ஒரு ஆயுதமாக பாவித்து ஒரு விடயத்தைப் பற்றி பேசிக் கொண்டுவருவது சிலருக்கு பொருத்தமான விடயம். என்னைப் பொருத்தமட்டில் சில விடயங்களை பெரும்பான்மை பக்கத்தில் இருந்து பார்த்து அதற்கு விடை தேட வேண்டியதுதான், சரியான முறை என்று நான் எப்போதும் கடைப்பிடித்து வந்தவன். ஆனால் இந்தப் பிரச்சினைகள் உருவாகி சம்மாந்துறையில் ஒரு ஜனாசா விழுந்ததும் நான் முச்சபையின் தலைவர்களை சபைக்கு அழைத்து அவர்களிடம் இதை அரசியல் ரீதியாக முன்னெடுக்காமல் நீங்கள் பள்ளிவாசல்கள் மூலமாக மக்களுக்கு செய்தியை சொல்லி நாம் ஒரு எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்று விணயமாக வேண்டிக் கொண்டு, அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை அதனால் இதை அரசியல்மயப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் இந்த சபையில் இல்லாமல் நாங்கள் எந்ததந்த முறையில் இதை எதிர்க்கலாமோ அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம்.

இன்று கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இதை ஒரு பிரேரணையாக எடுத்து வந்திருக்கின்றார். நிச்சயமாக இந்தப் பிரேரணையை இந்த சபையினால் ஏகமனதான தீர்மானமாக எடுத்து அது உரிய முறையில் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும், சுகாதார அமைச்சர் அவர்களுக்கும், WHO பிரதிநிதி அவர்களுக்கும், மாவட்டத்தின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த சபையில் முன்வைத்த கருத்துகளை நாகரீகமாக தொகுத்து அனுப்புவதற்கு இந்த சபை ஏகமனதாக முடிவு எடுக்கின்றது என்பதை கூறிக் கொண்டு இன்று நமது கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் விசேட செய்தியை அறிவிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். தன் செய்தியை சபைக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/36/12**

கொவிட் - 19 இனால் உயிரிழக்கும் ஜனாசாக்களை தகனம் செய்வதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியை இந் நாட்டில் வாழும் முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்கு ஏற்படும் அடிப்படை மனித

உரிமையை மீறும் செயலாகக் கருதி கொவிட் - 19 இனால் உயிரிழக்கும் ஜனாசாக்களை அடக்கம் செய்ய சிபார்சு செய்யவும், இதனை கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும், சுகாதார அமைச்சர் அவர்களுக்கும், WHO பிரதிநிதி அவர்களுக்கும், மாவட்டத்தின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்புவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/36/13

எமது சபையின் வழக்குகளுக்கு பிரசன்னமாகி, சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த சட்டத்தரணி தாஹா செய்னுடீன் அவர்களின் மறைவினை ஒட்டி குறித்த சட்டத்தரணிக்கு ஜூனியராக கடமையாற்றி வந்த சட்டத்தரணி றாசீம் ஹமீட் அவர்களை கல்முனை, மாவட்ட மற்றும் உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் / செய்யப்படும் சபையின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு நியமிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/36/14

சபைக்கான பொருட்கள், சேவைகளை கிழக்கு மாகாண சபையினால் பதிவு செய்யப்பட்ட மற்றும் எமது சபையில் பதிவு செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளை வழங்குநர்களிடமிருந்து பெறுவது எனவும், இதற்கு மேலதிகமாக விசேட சந்தர்ப்பத்தில் நிபுணத்துவ சேவைகளையும், பொருட்களையும் திறந்த பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி பெறுவது தொடர்பான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சக உறுப்பினர்களுக்கும் அன்பின் பணிவு, கடந்த 2018.02.10 ஆந் திகதி தேர்தல் இடம்பெற்றது. நாளையுடன் ஏறக்குறைய 03 வருடங்களை சென்றிருக்கின்றோம். இன்னும் ஒரு வருடம் அல்லது மேலும் இரண்டு மூன்று மாதங்கள் சபைக்குரிய காலம் நீடிக்கப்படலாம். தேர்தல் செயற்பாடுகள் சம்மந்தமாக ஒரு சில கருத்துகளை தெரிவிக்கலாம் என்று நினைக்கின்றேன். உண்மையிலே 2018 ஆம் ஆண்டு தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தேர்தலுக்குரிய போட்டியாளர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்திலே நான் முதன் முதல் களம் இறங்கினேன். தேர்தல் காலத்திற்கு முன்னர் கௌரவ தவிசாளர் அவர்களுடன் நெருக்கமான உறவு. அவரது ஆசியும் ஆலோசனையும் தொடர்ந்தும் இருக்கின்றது. மாஹிர் சேர் அவர்களையும் 2, 3 தடவை சந்தித்து இருக்கின்றேன். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் நண்பராக உதவி செய்திருக்கின்றார். ஏனையவர்கள் யாரையும் நான் நன்றாக அறிந்ததில்லை.

ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் முதன் முதலாக கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் எமது பட்டியலை தயாரிப்பதற்கு தயாரானார். அதன் பின் சகோதரர் அச்சி முஹம்மட் அவர்கள் அவ்வாறு கூடி தேர்தல் இடம்பெற்றது. தேர்தல் இடம்பெறும் போதே எனது வெற்றியில் கௌரவ தவிசாளர் அவர்களது பங்கும் இருக்கின்றது. பூரண ஆதரவாக இருந்தவர். அதனை நினைவுபடுத்த

வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகூற வேண்டும். அதே போன்றுதான் தேர்தல் காலங்களிலே ஒட்டுமொத்த சம்மாந்துறையில் நடந்த சம்பவத்தை விட வளத்தாப்பிட்டியில் அதிகமான சம்பவங்கள் இடம்பெற்றது. தயாகமகே, மாகாண சபை உறுப்பினர் மஞ்சலோ பெணான்டோ உட்பட எங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட வளத்தாப்பிட்டி வட்டாரத்தையும், மல்வத்தை வட்டாரத்தையும் கைப்பற்றுவதற்கான முன்னெடுப்புகளை செய்து கொண்டிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்திலே எனக்கு ஒரு இடைஞ்சல் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தின் போது முதன் முதலாக அவ் இடத்திற்கு வருகை தந்து ஆறுதல் தந்தவர் சகோதரர் முஸம்மில் அவர்கள். அதனைப் போன்று தொடர்ந்து இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தல் கூட்டங்களின் போதும் யாரையும் அறிந்திருக்கவில்லை. சகோதரர் முஸம்மில் அவர்களும், அச்சி முஹம்மட் அவர்களும் தொடர்பு கொண்டு எனது வெற்றியின் பங்காளர்களாக ஆலோசனை வழங்கி ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள். நிச்சயமாக அதற்கு நன்றி கூற வேண்டும்.

தேர்தல் நிறைவு பெற்றதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் 04 ஆசனங்களும் ஏனைய இரு கட்சிகளுக்கு 08, 08 ஆசனங்களாகவும் வந்த போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரதிநிதியாக இருக்கின்ற கௌரவ தவிசாளர் அவர்கள் தவிசாளராக வர வேண்டும் என்று ஒத்த கொள்கையின் அடிப்படையில் நாங்கள் கௌரவ தவிசாளராக ஆதரித்து செயற்பட்டோம். ஒவ்வொரு வாக்கெடுப்பின் போது ஒவ்வொரு கருத்து கோரும் போதும் நாங்கள் தொடர்ந்து தெரிவித்த கருத்து அகில இலங்கை மக்கள் காங்கிரசுடன் கௌரவ தவிசாளர் நௌசாட் சேர் அவர்களை தவிசாளராக்குவோம். அவருடன் இணைந்து செயற்படுவோம் என்ற கருத்தை கூறி நாங்கள் ஆதரவு தெரிவித்து நாங்கள் தவிசாளராக தெரிவு செய்தோம். அதன் முன்னராகவே நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தேன். அந்த அமைப்பாளர் என்ற அடிப்படையிலே நான் ஆரம்ப காலகட்டங்களில் ஒரு சில வேலைத் திட்டங்களை இப் பிரதேசங்களுக்கு முன்னெடுத்து இருந்தாலும் உப தவிசாளர் தெரிவு இடம்பெற்று அதன் பின்னர் கணிசமான வேலைத்திட்டங்களை வளத்தாப்பிட்டி, மல்வத்தை பிரதேசங்களுக்கு முன்னெடுத்தேன்.

அந்த சந்தர்ப்பங்களில் சம்மாந்துறையில் அதிகமானவர்கள் கேட்பார்கள் சம்மாந்துறை பிரதேசத்தில் இவ் வேலைகளை செய்யலாம் தானே ஏன் இப் பிரதேசத்தில் செய்கின்றீர்கள் என்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். நான் அவர்களுக்கு கூறியது தமிழ் பிரதிநிதியாக சம்மாந்துறை பிரதேச சபையில் 04 பிரதிநிதிகள் இருக்கின்றோம். 16 பிரதிநிதிகள் சம்மாந்துறை பிரதேசத்தில் இருக்கின்றார்கள். அதனைப் போன்று 02 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். மாகாண சபை உறுப்பினர் இருக்கின்றார். இவ்வளவு பேர் இருக்கும் போது நான் சம்மாந்துறைக்கு சேவை செய்வதை விட அவர்களின் பங்கு இருக்கின்றது. நான் எனது பங்கினை எங்களது பிரதேசத்திற்கு செய்கின்றேன் என்று செய்து கொண்டிருந்தேன். இருந்தாலும் எனக்கு கிடைத்த ஒரு சில நிதிகளின் ஊடாக சம்மாந்துறை பிரதேசத்திற்கு ஏறக்குறைய 50 மலசலகூடங்களை அச் சந்தர்ப்பத்தில் வழங்கினேன். அதன் பொறுப்பை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி சார்பிலே வாக்குக் கேட்டவர்களிடம் ஒப்படைத்திருந்தேன். அவர் யார் என்று கூட எனக்கு தெரியாது.

அதற்கு மேலதிகமாக சீமெந்து கூலித் தொழில் செய்யும் கூலித் தொழிலாளர் குழுவிற்கு ரூபா 500000.00 பெறுமதியான பொருட்கள் கொடுக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே நான் 55 இலட்சம் கொண்ட 11 Cheque களை கொண்டு வந்தேன். அதில் 02 Cheque களை சம்மாந்துறை பிரதேசத்தின் மேசன் கூலித் தொழில் சங்கத்திற்கு பெற்றுக் கொடுத்தேன். இவ்வாறு என்னால் முடிந்த வேலைத்திட்டங்களை இப் பகுதிக்கு செய்து கொடுத்தேன். நாங்கள் உறுப்பினராக இருந்து வரும் காலங்களிலே நான் தொடர்ந்தும் கடைப்பிடிப்பது இந்த ஊரின் ஒற்றுமைக்கு நான் எந்த சந்தர்ப்பத்திலும் பங்கம் விளைவிக்கக்கூடாது. எமது ஒற்றுமைக்கு எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு தடையாக முன்னுதாரணமாக இருந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றேன். ஜனாசா சார்பான கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்கின்றேன். சகோதரர் முஸம்மில் அவர்களுடன் ஆரம்பத்தில் முரண்பட்டாலும் நான் அவரை மதிக்கின்றேன், நேசிக்கின்றேன். அவரது பண்பினை போற்றுகின்றேன். அந்த அடிப்படையிலே எனக்கு முதலாவதாக ஒரு கடிதத்தை தந்து ஆதரவு தந்து உப தவிசாளர் ஆவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அச்சி முஹம்மட் சேர் அவர்களுக்கு நான்

எனது கடிதத்தை கொடுத்திருந்தேன். அதே போன்றுதான் கடந்த கால தேர்தலிலே என்னோடு பாடுபட்ட குளமணி என்ற தேசிய பட்டியல் வேட்பாளர். தேர்தல் முடிந்த பின்னர் அவரிடம் கூறினேன் 03 வருடம் இருந்துவிட்டு 04வது வருடம் உங்களுக்கு எனது பிரதிநிதித்துவத்தை மாற்றித்தருவேன். நீங்கள் ஒரு வருடம் இருக்க வேண்டும் என்று, நேற்று இரவும் கூட அவரிடம் சொன்னது நீங்களும் அப்பதவியில் இருக்க வேண்டும் என்று, இல்லை அண்ணா நீங்களே இருந்து செய்யுங்கள் என்று கூறினார். நான் இல்லை நீங்கள் இருக்க வேண்டும் என்று கூறினேன்.

இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது எமக்கு ஆலோசனை வழங்குபவர்கள், அறிவுரை வழங்குபவர்கள் கூறும் கருத்து என்னவென்றால் உப தவிசாளர் பதவியை 02 வருடங்களின் பின் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்த போது அதிகமானவர்கள் கூறியது கொடுக்கக்கூடாது என்று, நான் பிறக்கும் போது கொண்டு வந்த பதவி அல்ல ஒன்றும். உறுப்பினருக்கு ஆசைப்பட்டேன். ஆனால் உப தவிசாளர் கிடைத்தது. உப தவிசாளர் எனதல்ல. இந்த சபைக்குரியது. யாராவது உப தவிசாளராக இருக்க வேண்டும். அவருக்கு அப் பதவியை கொடுத்தேன். அந்த சந்தர்ப்பத்தில் நினைத்தேன் யாராக இருந்தாலும் சேவை செய்வார்கள் என்று, இன்றும் கூட இந்த பிரதிநிதித்துவத்தை கொடுப்பதற்காக ஆலோசனை செய்த போது அதிகமானவர்களின் கருத்து ஏன் உறுப்பினரை விட்டுக்கொடுக்கின்றாய் என்று கேட்டார்கள். நான் கூறிய விடயம் நான் இல்லாவிட்டாலும் எங்களது 20 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. கௌரவ தவிசாளர் அவர்கள் எல்லா பிரதேசங்களையும் கட்டியெழுப்பிச் செல்லக்கூடியவர் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

ஆகவே நீங்கள் நிச்சயமாக நான் இப் பதவியை விட்டு விலகினாலும் எதிர்வரும் காலங்களில் வளத்தாப்பிட்டி பிரச்சினைகளை அல்லது எங்களது வட்டாரப் பிரச்சினைகளையும் ஒரு பிரச்சினையாக எடுத்துப் பார்த்து வருகின்ற உறுப்பினருக்கும் ஆதரவு வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விசேடமாக உறுப்பினராக இருந்த காலங்களில் யாரவது ஒருவரது மனம்நோக நடந்திருந்தால் விசேடமாக இரண்டாவது தவிசாளர் தெரிவிலே தவிசாளர் அவர்களை எதிர்த்து வாக்களிக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகியிருந்தேன். அதற்காக நான் மனமார்ந்த மன்னிப்பை பகிரங்கமாக கேட்டுக் கொள்கின்றேன். அதே போன்று மாஹிர் சேர் அவர்கள் ஒத்துழைப்பு வழங்கி இருக்கின்றார். நான் இந்த பிரதேச சபை தேர்தலிலே வெற்றி பெற்ற போது வாக்கெடுப்பு நடக்கும் போது வரவிடாமல் உங்களை எதிர்க் கட்சியினர் தாக்கப்போகின்றார்கள். உங்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என்று ஒரு செய்தி வந்தது. அந்த சந்தர்ப்பத்தில் கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ் அவர்கள் யார் என்றுகூட தெரியாது. தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது நான் பௌசுள்ளாஹ் உறுப்பினர் பேசுகின்றேன். சம்மாந்துறைக்கு வருவது என்றால் உங்களுக்கு பாதுகாப்பு வாகனம் வேண்டுமா? அல்லது நான் வரவா நீங்கள் பயப்படக்கூடாது நான் முன்னுக்கு நிற்பேன் என்று கூறினார். அவ்வாறு ஆதரவு தெரிவித்தார்.

எனது பிரச்சினையின் போது கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்களும் முன் நின்றார். அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். அதே போன்று சகோதரி கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் நல்ல ஆக்கபூர்வமான கருத்துக்கள் தெரிவிப்பதை பார்த்திருக்கின்றேன். அவரை வரவேற்கின்றேன். அதே போன்று கௌரவ உறுப்பினர் நிலுவ்பா, கௌரவ உறுப்பினர் சரீபா, கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் அஸ்பர், கௌரவ உப தவிசாளர் அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை, கௌரவ உறுப்பினர் றியாஸ், கௌரவ உறுப்பினர் ஜிப்ரி, கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் இன்பவதி, கௌரவ உறுப்பினர் சஹீல் அனைவருக்கும் நன்றி கூறி, யாராவது ஒருவரை மறந்திருந்தால் அத்தனை பேருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன். அதனைப் போன்று இந்த பிரதேச சபையில் உறுப்பினராக இருந்த காலப்பகுதியிலே தவிசாளர் அவர்கள் இல்லாத காலகட்டத்திலே அல்லது அவரது பணிப்பின் பெயரில் செயலாளர் அவர்கள் உண்மையாக ஒரு சகோதரர் போன்று எனது கோரிக்கைகளை, விண்ணப்பங்களை உள்வாங்கி அதனை நிறைவு செய்து கொடுத்திருக்கின்றார். அது மட்டுமல்ல அனைத்து உத்தியோகத்தர்களும் சகோதரர் போன்று எனது விண்ணப்பங்களை செயற்படுத்தி இருக்கின்றார்கள். அதே போன்று இங்கு இருக்கின்ற ஊழியர்கள் அத்தனை பெரும்

நல்ல உள்ளம் கொண்டவர்கள், அன்பானவர்கள் அவர்களுக்கு இந்த சந்தர்பத்திலே நன்றி கூறுகின்றேன். அதற்கு மேலதிகமாக சம்மாந்துறை மக்கள் என்னை கண்ணியமாக நடாத்தி இருக்கின்றார்கள். தமிழர் என்று பார்த்ததில்லை. ஆகவே அவர்களுக்கு இந்த மண்ணுக்கும் நன்றி கூறி தொடர்ந்தும் இப் பிரதேசத்தின் ஒற்றுமைக்கும் அபிவிருத்திக்கும் நான் பங்காளனாக இருப்பேன். ஒரு அமைப்பாளர் என்ற வகையிலே சேவை செய்வேன். இவ்வாறான வேலைத் திட்டங்கள் முன் எடுக்கும் போது உங்கள் அத்தனை பேரின் ஒத்துழைப்பு எனக்கு தேவை என்று கூறி, மீண்டும் நான் மனதார உங்கள் யாருக்கும் துரோகம் நினைத்ததில்லை. துரோகம் செய்ததில்லை. அவ்வாறு செய்ததாக இருந்தால் இறைவன் மீது சாட்சியாக உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன். அதனை மறந்து எதிர்வரும் காலங்களில் ஜெயச்சந்திரனை ஆதரியுங்கள் என்று வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களே, இன்று நமது கௌரவ உறுப்பினர் முன்னாள் உப தவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்கள் வரவேற்கத்தக்க ஒரு கலாசாரத்தை ஏற்படுத்தி இருக்கின்றார். இவர் துரதிஸ்டவசமாக 2011 ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தல் காலத்தில் இவரும் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் எங்களது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பட்டியலில் உள்வாங்க முடியாத ஒரு சூழல் ஏற்பட்ட காலத்தில் இருந்து அவருக்கும் எனக்கும் அறிமுகம் ஏற்பட்டது. கௌரவ அமைச்சர் தயரத்ன அவர்களின் அலுவலகத்தில் வேலை செய்யும் காலத்தில் ஆகும். அன்று விடுபட்டவர் மீண்டும் 2018ம் ஆண்டு தேர்தலில் வளத்தாப்பிட்டியில் அந்த சமூகத்தின் பிரதிநிதியாக ஒருவர் இந்த சபையில் இருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தோடு செயற்பட்டு அந்த மக்களினால் தெரிவு செய்யப்பட்டு இந்த சபையில் ஊரின் ஆதரவோடு Town Council காலத்திற்கு பின் சம்மாந்துறை உள்ளூராட்சியில் பிரதி தவிசாளராக எம்மால் நியமிக்கப்பட்டு அவர் கூறியவாறு அவரை தெரிவு செய்த மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சபையின் முழு ஆதரவோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அபிவிருத்தி வேலைகளுக்கு சம்மாந்துறை பிரதேச சபை எந்த உறுப்பினருக்கும் தடையாக இருந்ததில்லை. அது நமது கலாசாரம்.அவர் தன் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் மிகவும் உண்ணிப்போடு செயலாற்றி அவரின் இறுதி செயலாக மல்வத்தை கிராமத்திற்கு மின் விளக்குகள் பொருத்தும் பணி நடந்து கொண்டிருக்கின்றது.

அவ்வாறு சேவையாற்றி வந்து ஒரு முன்னுதாரணமாக தான் அன்று கொடுத்த வாக்கை நிறைவேற்றி தற்போதய உப தவிசாளர் அச்சி முஹம்மட் அவர்களுக்கும் அவரின் பின் சந்தர்ப்பம் கொடுப்பதாக கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றி, அதன் பின் இன்று இந்த சபையின் அவர் கூறினார் இந்த சபை நீடிக்கப்படலாம் என்று, அந்த சாத்தியக் கூறுகள் இருக்கின்றது. அது ஒரு புரம் இருக்க அவ்வாறு நீடிக்கப்படலாம் என்று தெரிந்தும் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முன் வருவது அவரின் அரசியல் தூரநோக்கின் வெளிப்பாடு. அதை மெச்சியவனாக, நமக்குள் கருத்து முறண்பாடுகள் இருந்திருக்கலாம். மனவேதனைகள் இருந்திருக்கலாம். ஆனால் சம்மாந்துறையின் பிரதேச சபை 2011 ஆம் ஆண்டு இருந்து நீங்கள் என் மேல் வைத்த நம்பிக்கையில் எந்த ஒரு பாகுபாடும் இன்றி கட்சி பேதங்கள், சலிப்பு, முரண்பாடுகள் இருந்தாலும் எவருக்கும் தனிப்பட்ட முறையில் பங்கங்கள் ஏற்படுத்தாமல் நடந்து வந்திருக்கின்றது. அதன் ஒரு பங்காளியாக நீங்கள் இருந்து எங்களை விட்டு விடைபெறுவது நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கும் எங்களுக்கும் ஒரு இழப்பு. ஆனால் அது உங்களின் வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு முயற்சி என்ற படியினால் உங்களை வாழ்த்தியவனாக சம்மாந்துறை மக்களின் சார்பிலும், சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினர்கள், சம்மாந்துறை பிரதேச சபையின் ஊழியர்கள் எல்லோரின் சார்பிலும் உங்களை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பல அரசியல் கட்சிகளின் ஊடாக இந்த கௌரவமான உயர் சபை அமைந்திருப்பதும் அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் தவிசாளராக இருப்பதும் இந்த ஊருக்கு கிடைத்திருக்கின்ற பாக்கியம் என கருதுகின்றேன். அதே நேரத்தில் அந்த அடிப்படையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பாக கௌரவ உறுப்பினர் வெள்ளி ஜெயச்சந்திரன் அவர்கள் இங்கு கௌரவ உறுப்பினராக இருப்பதை இட்டு எல்லோரையும் விட நான் மிகவும் சந்தோசப்படுகின்றேன்.

காரணம் கௌரவ உறுப்பினர் அவர்களுக்கும் எனக்கும் சபையில் வந்துதான் அறிமுகம் என்று இல்லை. நாங்கள் தேசிய கட்சியை சார்ந்தவர்கள். தேசிய கட்சியோடு இணைந்து செயற்படுபவர்கள். அந்த அடிப்படையில் 2000ம் ஆண்டு சம்மாந்துறையின் அரசியலை தூக்கி வீசிவிட்டு அம்பாரையை நோக்கி தேசிய பெரும்பான்மை கட்சிகளோடு இணைந்து செயற்படுகின்ற காலகட்டத்தில் எனக்கும் அவருக்குமிடையில் மிகவும் சுவாரசியமான முறையில் அதிக விடயங்கள் இருக்கின்றது. அவருக்கும் ஞாபகம் வரும் என கருதுகின்றேன். அவ்வாறு எங்களது சுவாரசியமான உறவு ஏற்பட்டது. அந்த அடிப்படையில் அவரும் நானும் மதத்தால் பிரிந்தாலும் நாங்கள் உள்ளத்தால் இணைந்திருக்கின்றோம். ஒரே சகோதரர்களாகத்தான் நாங்கள் இன்று இருக்கின்றோம். எங்களுக்குள் எந்தவிதமான கசப்பு உணர்வுகளும் இல்லை.

ஆனால் இந்த சபைக்கு ஒவ்வொரு கட்சி சார்பாக பலர் வந்திருந்தாலும் தான் இருக்கின்ற பெரும்பான்மை கட்சி ஊடாக செய்யக்கூடிய பொது விடயங்களை மக்களுக்கு எடுத்து இங்கு இருக்கின்ற ஏனைய உறுப்பினர்கள் செய்திருந்தாலும் சகோதரர் கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் கூடுதலான வேலையினை தனது மக்களுக்கு ஆற்றி இருக்கின்றார் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. என்னைப் பொருத்தமட்டில் அவரது பொதுச் சேவை மிகவும் உயர்தரமானதும், உண்ணதுமானதுமாகத்தான் கருதுகின்றேன். கௌரவ தவிசாளர் அவர்கள் 2011 ஆம் ஆண்டை ஞாபகப்படுத்திவிட்டார். அதை நான் கூறத்தான் வேண்டும். 2011ம் ஆண்டில் எனக்கும் அரசியல் ரீதியாக வெட்டு விழுந்தது. அதற்காக நான் கட்சி மாறவில்லை. நான் 12 பேரில் ஒருவராக கேட்டேன் தரவில்லை. ஆனால் நான் 12 பேரை போட்டு களம் இறங்கினேன். இலங்கையில் முதன் முதலாக அதில் தான் ஒட்டக சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒட்டக சின்னத்தை அறிமுகப்படுத்திய பெருமை என்னைத்தான் சாரும். எனவே, அவரது அரசியல் மேலோங்கி செல்வதற்கு எங்களாலான ஒத்துழைப்பை என்னைப் பொருத்தமட்டில் நான் வழங்குவேன் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் என்ற வகையிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதய உப தவிசாளர் என்ற வகையிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் முகவராகவும் செயற்பட்டு தேர்தலில் பல எதிர் விளைவுகளுக்கு மத்தியில் நாங்கள் ஏதோ இறைவனின் அருளால் உறுப்பினராக இந்த சபைக்கு வந்திருக்கின்றோம். நான் நினைக்கின்றேன் தற்போது நீங்களும் நானும் தான் 2011ம் ஆண்டில் வேறு ஒருவரும் இல்லை. அனைவரும் புதியவர்கள். நான் ஒரு இஸ்லாமிய தாயின் வயிற்றில் பிறந்ததால்தான் ஒரு இஸ்லாமியராக இருக்கின்றேன். அவர் ஒரு இந்து தாயின் வயிற்றில் பிறந்ததால்தான் இந்துவாக இருக்கின்றார். யாருமே மதம் மாறி வரவில்லை. பிறப்பால்தான் ஒவ்வொரு மதத்தில் இருக்கின்றோம்.

மனிதன் பணத்தால் உயர்ந்தவர்கள் இல்லை. குணத்தால் மட்டும்தான் உயர்ந்தவராக கணிக்க முடியும். அவர் அவரது பண்பினாலும் அவரது குணத்தினாலும் ஒரு உயர்ந்த நிலையை சபையின் எடுத்துக்காட்டாக இருக்கின்றார். நான் எனது வாழ்க்கையிலே யாரையுமே வேற்று மதம் என்று பழகவில்லை. என்னோடு பழகுகின்ற பிற மத நண்பர்களுக்கும் தெரியும். எனவே, இந்த சந்தர்ப்பத்தில் நான் தடுத்து விடுவேன் என்ற பயத்தின் காரணமாக என்னிடம் கூட ஆலோசனை பெறவில்லை. அவர் எதிர்காலத்தில் நன்றாக பிரகாசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தவனாக, இன்னும் ஒரு உறுப்பினர் இருக்கின்றார். அவருக்கும் நேரம் கொடுக்க வேண்டும் எங்களது கட்சி சார்பான வகையில் நாங்கள் இருவரும் அவருக்கு நன்றிக் கடன் பட்டவர்களாக, எனது தனிப்பட்ட முறையிலும் இந்த சபையின் ஏனையோர்கள் சார்பாகவும் அவருக்கு நாங்கள் ஏதாவது செய்திருந்தால் மன்னிக்க வேண்டும் என்று கேட்டு இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய இறைவனுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, முன்னாள் உப தவிசாளர் சகோதரர் ஜெயச்சந்திரன் அவர்களே, அனைத்து உறுப்பினர்களுக்கும் அன்பின் பணிவு, ஜெயச்சந்திரன் அவர்கள் ஒரு விடயத்தை தொட்டுச் சென்றார். அரசியல் என்று வரும் போது பெயர்ப்பட்டியல் தயாரித்ததில் இருந்து

ஆரம்பித்தார். அவர் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதன் பின்பு ஒரு வசனம் சொன்னார். அது இன்றைக்கும் என் காதில் கேட்கின்றது. என்னால் முடிந்தது தவிசாளராக முடியாது உப தவிசாளர் தான் நான் போகக்கூடிய உச்ச இடம். அதை நீங்கள் தடுக்காதீர்கள் என்றார். இறுதியாக கொழும்பிலும் என்னிடம் கூறினார். என்னால் போகக்கூடியது உப தவிசாளர்தான் சம்மாந்துறைக்கு நான் தவிசாளராக வரமுடியாது. அந்த சந்தர்ப்பத்தை விட்டுத்தாருங்கள் என்றார். அத்தோடு நான் வந்துவிட்டேன். அதற்கு முதல் அதை தடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். சில முயற்சிகள் செய்திருந்தேன். அது தோல்வியாக முடிந்தாலும் அவர் இறுதியாக கூறிய விடயம் இன்றைக்கும் என்னுடைய காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அதன் அடிப்படையில் உச்சகட்டமாக இந்த சம்மாந்துறை பிரதேச சபையின் உப தவிசாளராக இருந்து செல்வது அவர் எடுத்திருக்கின்ற ஒரு பெரிய விடயம். இந்த சபையில் அரசியல் ரீதியாகவோ தனிப்பட்ட ரீதியாகவோ ஏதும் பிழையாக பேசி இருந்தால் இந்த 20 உறுப்பினர்கள் முன்னிலையில் மன்னித்து எதிர்வரும் காலங்களில் எமது கட்சியையும் எமது ஊரின் பிரதிநிதித்துவத்தையும் கட்சி சார்பாக தனிப்பட்ட ரீதியில் ஏதும் பிளவுகள் இருந்தாலும் நாம் ஒன்றாக செயற்பட வேண்டும். ஒன்றாக செயற்படுவேன் என்றும் நன்றியை கூறி, இந்த இடத்தில் சரியான முறையில் உரிய காலத்தில் நீங்கள் சொன்னது போல் 03 வருடத்தில் முடிப்பேன் என்று முடித்து உங்களது பெருமையை காட்டி இருக்கின்றீர்கள். நிச்சயமாக எதிர்வரும் காலங்களில் நாங்கள் பங்காளிகளாக இருப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய கௌரவ உறுப்பினர் முன்னாள் உபதவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்களுடைய பிரிவு மனம் ஏற்க முடியாமல் இருக்கின்ற போதிலும் உண்மையிலே நான் இந்த சபையிலே இளையவனாக இருந்தாலும் எனக்கு பல அறிவுரைகளை கூறி உண்மையிலே நீ இவ்வாறுதான் நடக்க வேண்டும் என்ற ஆசியும் கூட அவர் எனக்கு செலுத்தியிருந்தார். இருந்தாலும் எங்களோடு பயணித்திருக்கின்ற 03 வருட காலங்களிலே எங்களுடைய அகில இலங்கை மக்கள் காங்கிரஸினுடைய தவிசாளராக நீங்கள் தெரிவு செய்யப்படுகின்ற போது அவர் விடாப்பிடியாக இருந்து எங்களது கட்சியினுடைய தவிசாளரை ஆதரித்து உண்மையிலே அந்த பெருமை அவரை சாரும். இன்னும் அவர் 03 ஆண்டுகளிலே உப தவிசாளர் பதவியையும், பதவி என்றால் எல்லோருக்கும் ஆசை வரும். ஆனால் அவர் அவ்வாறு இல்லாமல் முன்னுதாரணமாக இன நல்லுறவை ஐக்கியப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலே அவர் விட்டுக்கொடுப்போடு முனைந்து செயற்பட்டமைக்கும் அவருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு, இன்னும் இன்னும் அவர் அவருடைய அரசியல் வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் சௌபாக்கியமாக மலர வேண்டும் என்று பிராத்தித்து விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய முன்னாள் உப தவிசாளர் அவர்கள் அவர் வேறு மதமாக இருந்தாலும், நான் வேறு மதமாக இருந்தாலும் என்னுடைய தாயின் வயிற்றில் பிறக்காவிட்டாலும் நான் அழைப்பேன் சகோதரா என்றுதான். அவருடைய பண்புகளை சொல்லிவிட்டு எனது உரையை முடிக்கலாம் என்று நினைக்கின்றேன். அவரிடம் முதலில் கண்ட பண்பு அவரிடம் கொடுக்கப்படுகின்ற வேலைகளை திறமையாகவும், நேர்த்தியாகவும், நேரத்திற்கும் அவர் செய்து முடிப்பார். அடுத்த விடயம் அவருடைய அலுவலகத்திற்கு ஒரு முறை சென்ற போது அவர் அலுவலகத்தில் இருக்கின்ற Filing System த்தினை பார்த்து ஆச்சரியப்பட்டேன். அவர் ஒரு திறமையானவர் என்று, அவருடைய நிர்வாகத்தை பற்றியும் நான் ஆச்சரியப்பட்டேன். அந்த நிர்வாகியை எவ்வாறு அவர் வழிநடத்துகின்றார் என்பதையும் நான் அவதானித்தேன். ஆகவே அவர் நிர்வாகமும் திருப்திகரமாக செய்வார் என்று நினைக்கின்றேன்.

அரசியலுக்கு நான் ஒரு சிறிய மாணவியாகத்தான் வந்தேன். ஆனால் எனக்கு சில விடயங்களை எவ்வாறு கொண்டு செல்ல வேண்டும் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் விளக்கம் கேட்டால் எங்களுடைய பல உறுப்பினர்களிடம் கேட்டிருக்கின்றேன். ஆனால் எனக்கு தெளிவாகவும் அதை இவ்வாறுதான் செய்ய வேண்டும் என்று எனக்கு தெளிவாக கூறிய ஒரே

ஒருவர் எங்களுடைய கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் ஐயா அவர்களை தான் கூற வேண்டும். அடுத்தது அவர் தாய் தகப்பனை மதிக்கக்கூடியவர் என்று ஒரு சந்தர்ப்பத்தில் விளங்கிக் கொண்டேன். ஏனென்றால் ஒரு இடத்தில் முதியோர் இல்லம் ஒன்று மல்வத்தையில் கட்டுவதற்காக அதிகமானவர்கள் வந்த இடத்தில் முதியோர் இல்லத்தை கட்டக்கூடாது. முதியோர் இல்லம் கட்டினால் தாய் தகப்பனை அந்தப் பிள்ளைகள் பராமரிக்க மாட்டார்கள். அந்தப் பிள்ளைகள்தான் தாய் தகப்பனை பராமரிக்க வேண்டும், கவனிக்க வேண்டும், அவர்களுக்கு உணவு ஊட்ட வேண்டும் என்று கூறினார். அவ்விடத்தில் நான் நினைத்தேன் இவர் ஒரு முழுமை நிறைந்த மனிதன் என்று நினைத்தேன். ஆகவே இந்த இடத்தில் உறுப்பினர் பதவியை விட்டுச் சென்றாலும் நாங்கள் அவருடைய வளர்ச்சியிலும் அவர் கொண்டுவருகின்ற அபிவிருத்திகளிலும் அவர்களுக்கு கை கொடுப்போம் என்று கூறி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த பிரதேச சபை தேர்தலில் நாங்கள் எல்லோரும் மக்களால் தெரிவு செய்து இந்த பிரதேச சபைக்கு உறுப்பினர்களாக வந்த போது எமக்குள் ஒரு வாக்கெடுப்பு எடுக்கின்ற சந்தர்ப்பம் ஒன்று வந்தது. அந்த நேரம் நாங்கள் கௌரவ தவிசாளர் அவர்களையும், கௌரவ முன்னாள் உப தவிசாளர் அவர்களையும் ஆதரித்து வாக்களிக்காமல் எதிர்த்து வாக்களித்தோம். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் கௌரவ முன்னாள் உப தவிசாளரும், தற்போதய கௌரவ உறுப்பினருமான ஜெயச்சந்திரன் அவர்கள் எனக்கு உதவி செய்திருக்கின்றார். அரசியல் அனுபவம் என்றால் என்ன, அரசியலில் எப்படி பயணிக்க வேண்டும் என்று கூறினார். நாங்கள் கொழும்பிற்கு சென்ற போது Ministry இற்கு செல்வதற்கு எங்களுக்கு வழி தெரியாது. Minister ஐ எப்படி சென்று சந்திக்க வேண்டும் என்று தெரியாது. என்னையும் கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்களையும் அவரின் சொந்த செலவில் அழைத்துச் சென்று அந்த இடத்தை காட்டினார். எங்களுக்கு நல்ல சந்தர்ப்பம் ஒன்று அமைந்திருந்தது இறைவனின் ஏற்பாடு அரசாங்கம் மாறிவிட்டது. மாறாமல் இருந்திருந்தால் அந்த வேலை நல்லதாக நடந்து நாங்களும் சேவை செய்தோம் என்று சொல்லுகின்ற அளவுக்கு இருந்திருக்கும். அரசாங்கம் மாறியதால் நாங்கள் எடுத்துச் சென்ற பணியை தொடர இயலாமல் போய்விட்டது. எனக்கு தனிப்பட்ட ஒரு உதவியும் செய்திருந்தார்.

சம்மாந்துறை இல் உப தவிசாளராக ஜெயச்சந்திரன் வருகின்றார் என்றவுடன் எமது ஊர் மக்கள் சொன்னார்கள் தமிழ் மதத்தவரா உப தவிசாளராக வரப்போகின்றார் என்று அதிகமானவர்கள் சொன்னார்கள். அதே மக்கள் கடந்த உப தவிசாளர் தெரிவில் அவரின் பதவியை இராஜினாமா செய்தவுடன் அவர்கள் உண்மையிலே கொடுத்த வாக்கை காப்பாற்றக்கூடிய ஒருவர் என்று சொன்னார்கள். அது முதலாவது படி உயர்வு. இராஜினாமா செய்வது என்பது முழுமையான ஒரு மனிதனாக மாற்றி இருக்கின்றது. அரசியலில் இருந்து எந்த ஒரு அரசியல்வாதியும் தன்னுடைய ஆசனத்தை இழப்பதற்கு விரும்பமாட்டார்கள். ஆனால் அவர் மனசார அவர் அந்த பதவியை இழக்கின்றார் என்று சொன்னால் உண்மையிலே எல்லோரும் போற்றக்கூடிய ஒரு மனிதன் என்று சொல்லி அவரை வாழ்த்தி இன்ஷா அல்லாஹ் அவர் நினைத்திருக்கின்ற காரியம் நிறைவேறி இன்னும் அவர் மக்களுக்கு சேவகனாக வரவேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையிலே எங்களுடைய முன்னாள் உப தவிசாளர் அவர்கள் இன்றைய நாளில் இருந்து விடுதலை பெறுவது எங்களுடைய தமிழ் பகுதிக்கு ஒரு மன வேதனை அளிக்கின்ற நிகழ்வு. உண்மையிலே அவருடைய தைரியத்தில்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்தோம். எந்த விடயமானாலும் அவர் முன்கூட்டியே சொல்லிவிடுவார். இந்தப்பிரச்சினை இருக்கின்றது இதனை நாம் ஒன்றிணைந்து பேசிக் கொள்வோம் என்று, ஆனால் அவர் இல்லாமல் இனிவரும் சபைகளில் என்னதான் செய்வது என்று தெரியவில்லை. அந்த வகையில் எமக்கு வரப்போகின்ற சகோதரியும் எங்களுடைய முன்னாள் உப தவிசாளரைப் போல் இருப்பாரா என்று தெரியவில்லை. இருந்தும் அவர் அவருடைய பெருமனதோடு விட்டுத்தந்திருப்பதை நினைத்து பெருமிதம் அடைகின்றேன். எங்களுக்கு பின்னால் இருந்து வழிகாட்டுவார் என்று நினைக்கின்றேன். அந்த வகையில் நான் வாழ்த்துகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையாக இந்த சபைக்கு நானும் கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் ஐயா அவர்களும் ஒரே தேர்தலில் போட்டியிட்டுதான் உறுப்பினர்களாக வந்திருந்தோம். இருந்தாலும் அரசியல் ரீதியாக அவருடைய நடத்தைகள் எங்களுக்கு பாரிய அனுபவங்களை பெற்றுத்தந்தது. இருந்தாலும் இந்த சபைக்கு முன்மாதிரியான 02 விடயங்களை அவர் செய்திருக்கின்றார். ஒன்று பிரதித்தவிசாளராக இருந்த போது அவர் குறிப்பிட்டவாறு குறித்த கால எல்லைக்குள் அதனை இராஜினாமா செய்து கொடுத்தது. அதே போன்று இன்றுதான் எங்களுக்கு தெரியும் இவர் இவ்வாறான எண்ணத்தோடு இந்த சபையிலே செயற்பட்டிருக்கின்றார். தன்னோடு தேர்தலிலே இருந்தவருக்கு கௌரவ உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று இன்றுதான் தெரியும். எனவே அவரது எண்ணங்களுக்கு இறைவன் நற்கூலியை வழங்க வேண்டும். கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் ஐயா அவர்களை முதன் முதலிலே சந்தித்தது கடந்த தேர்தல் காலத்தில் ஒரு பிரச்சினை இடம்பெற்ற சந்தர்ப்பத்திலே தான். அவருக்கு ஞாபகம் இருக்கின்றதா என்று தெரியாது. அன்றுதான் எனக்கு அவரும் ஒரு வேட்பாளர் என்று தெரியும்.

ஆனால் சபைக்கு வந்த பின்பு எங்களுடைய முதலாவது அமர்வு இடம்பெற்று நாங்கள் தேநீர் அருந்திய பின்னர் நானும் அவரும் ஒரு 5 நிமிடம் உரையாடிக் கொண்டிருந்தோம். அதன் பின்னர் இவரது தோற்றத்தைப் பார்த்து இவர் ஒரு சாதாரணமாக எங்களுடைய வயதெல்லைக்கு உட்பட்டவர் என்று நினைத்தேன். ஆனால் அன்றுதான் விளங்கியது இவர் தங்களை விடவும் வயதில் மேலானவர் என்று, அன்றில் இருந்து இன்றுவரைக்கும் அவரை பெயர் சொல்லியோ, உறுப்பினர் என்றோ அழைத்ததில்லை. Chief என்றுதான் அழைப்பேன். ஏனென்றால் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் ரீதியாக எனக்கு சில அறிவுரைகளை வழங்கி இருக்கின்றார். அவருடைய அபிவிருத்தியில் என்னை இணைத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் மிகவும் பிராயச்சித்தம் எடுத்தவர். ஆனால் நான் அதற்கு இடமளிக்கவில்லை. ஒரு தடவை பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களை கொண்டுவந்து உபகரணங்களை கொண்டு வந்திருக்கின்றேன் விரும்பிய பாடசாலைகளை சொல்லுங்கள் நான் அதனை உங்களுக்கு செய்து தருகின்றேன். அந்த பாடசாலைகளின் பெயருக்கு மாற்றி தருகின்றேன் என்றார். ஆனால் நான் அவரிடம் நீங்கள் கொண்டுவந்தது வேண்டாம். எவ்வாறு எடுக்கலாம் என்ற வழியை சொல்லுங்கள் நான் எடுத்துக் கொள்கின்றேன் என்று அவரிடம் கேட்டேன். அவ்வாறு அவருக்கு ஒரு நல்ல பண்பு இருக்கின்றது.

உண்மையிலே இந்த சபைக்கு ஒரு முன்னுதாரணமாக நாங்கள் இவரை ஏற்றுக் கொள்ளவேண்டும். சாதாரணமான குடும்பத்திலே பிறந்து வளர்ந்து இருந்தாலும் அவருடைய அரசியல் பிரவேசம் இந்த ஊருக்கு ஒரு முன்னுதாரணம். எந்த ஒரு அபிவிருத்தி பணியையும் அவர் இந்த ஊருக்காக கொண்டு வருகின்ற போது தனியே வளத்தாப்பிட்டிக்கான உறுப்பினர் என்ற பெயரோடு கொண்டுவரவில்லை. சம்மாந்துறை பிரதேச சபையினுடைய ஒரு கௌரவ உறுப்பினர் என்ற பெயரோடு இந்த சபைக்காக அந்த அபிவிருத்தியை கொண்டு வந்து செய்தவர். இவ்வாறு இந்த ஊருக்கு பெருமிதம் கொள்ளக்கூடிய ஒருவரை இந்த சபை இன்று இழக்கின்றது என்று எண்ணுகின்ற போது மனம் உருகுது ஐயா. உங்களது அரசியல் வெகுகாலம் செல்ல வேண்டும் என்று அரசியல் வாழ்க்கையை வாழ்த்தி இந்த சபையிலே சில சந்தர்ப்பங்களில் சில கருத்து முறண்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும் எனது சார்பாகவும் இந்த சபையினுடைய கௌரவ உறுப்பினர்கள் சார்பாகவும் கௌரவ தவிசாளர் அவர்கள் சார்பாகவும் மன்னிப்பு கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ முன்னாள் உப தவிசாளர் வெள்ளி ஜெயச்சந்திரன் ஐயா அவர்களே, வெள்ளி ஜெயச்சந்திரன் என்ற பெயருக்குரிய அர்த்தம் என்ன என்பதை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன் ஐயா. எதிர்காலத்தில் நீங்களும் ஒரு வெள்ளி போன்று இந்த சமூகத்திற்கும் ஊருக்கும் ஜொலிக்க வேண்டும் என வாழ்த்தி உண்மையில் நீங்கள் இந்த சபையை விட்டுச் செல்வது என்பது ஒரு மன வேதனையாக இருக்கின்றது. ஏனென்றால் நீங்கள் உண்மையாக திறம்பட செயற்படக்கூடியவர். இரண்டு சமூகங்களையும் இணைத்து 02 ஊருக்குமிடையில் எந்த வேற்றுமைகளையும் பாராது

திறந்த மனதோடு நீங்கள் நடந்திருக்கின்றீர்கள், கதைத்திருக்கின்றீர்கள், செயற்பட்டு இருக்கின்றீர்கள். ஆகவே எதிர்காலத்திலும் இவ்வாறே இந்த ஊருக்கும், சமூகத்திற்கும் ஏன் இந்த முழு நாட்டுக்குமே முன்னுதாரணமாக மீண்டும் வளர வேண்டும் என வாழ்த்தி இவ்வளவு காலமும் ஒத்துழைத்தமைக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது முன்னாள் உப தவிசாளர் அவர்களும் தற்போதய உறுப்பினருமான வெள்ளி ஜெயச்சந்திரன் அவர்கள் எங்களைவிட்டு பிரிகின்றார் என்ற எண்ணம் இல்லை. ஏனென்றால் அவர் எங்களோடு தொடர்ந்து வருவார் என்ற எண்ணமே இருக்கின்றது. இதில் இல்லாவிட்டாலும் மாகாண சபையில் இணைந்து கொள்வார் என்று, இந்த நம்பிக்கையோடு அவர் பிரியமாட்டார். எந்த நேரத்திலும் நாங்கள் நினைப்பது அவர் எங்களை மறந்து விட்டார் என்று ஆனால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவரது தெலைபேசி அழைப்பு என்னை அழைத்துக் கொண்டிருக்கும். அது தொடரும் என நினைக்கின்றேன். எனக்கும் ஒரு சிறிய உதவி ஒன்று செய்திருக்கின்றார். சபையால் செய்ய வேண்டிய உதவியை அவர் தனித்து வந்து அவரை அழைக்காமலே முன் நின்று என்னை அழைத்துச் சென்று அந்த உதவியை செய்தார். தற்போதும் எனக்கு இப்படியான ஒரு பிரச்சினை வரும் போது நான் நினைத்தேன் ஜெயச்சந்திரன் ஐயா அவர்களுக்கு தெரியாதா என்று, ஏனென்றால் எதிரிகள் ஒருவருக்கு கூடுதலாக இருப்பது என்றால் அது அவருடைய பலம்.

ஆகவே ஜெயச்சந்திரன் ஐயா அவர்களே, உங்களுக்கு எதிரிகள் இருக்கின்றார்கள் என்றால் அது உங்களது தைரியம். துரோகிகள் பின்னுக்கு இருக்கின்றார்கள் என்றால் நீங்கள் ஒரு நேர்மையானவர். நேர்மையானவர் என்ன என்பதை நாங்கள் செய்து காட்டுவதற்கு முன் நீங்கள் செய்து காட்டிவிட்டீர்கள் என்று எண்ணி உண்மையிலே உங்களுக்கு சபை சார்பாகவும், எங்களது இனம் சார்பாகவும் நன்றியை தெரிவிக்க வேண்டும். நான் இன மத பேதத்தில் கதைக்கவில்லை. இந்து மதத்தவர்கள் வேறு மதத்தை தள்ளி வைத்துக் கொள்வார்கள். ஆனால் நாங்கள் முஸ்லீம்கள் அவ்வாறு இல்லாமல் உங்களை எல்லா மதமும் சம்மதம் என்ற நிலைப்பாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏதாவது அவ்வாறான பேச்சுக்கள் மனிதன் தவறுக்கு மத்தியில் படைக்கப்பட்டவர்கள். எங்களது சபையோர்கள், உறுப்பினர்கள், தவிசாளர் உட்பட எல்லோரும் ஏதோ ஒரு பேச்சு பேசி இருந்தால் மன்னிப்பு என்பது இறைவனால் அருளப்பட்டது. இந்த சபை ஊடாக மன்னிப்பு கேட்கின்றேன் மன்னித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லோரினதும் கருத்துக்களையும் உள்வாங்கியவனாக, எங்களுடைய முன்னாள் உப தவிசாளர் சகோதரர் ஜெயச்சந்திரன் அவர்கள் அவர் அரசியலுக்கு வந்துதான் எனக்கு அறிமுகம் என்று இல்லை. எனது பழைய நண்பர். அவருக்கு நான் அறிந்தமட்டில் அவர் எனக்கு பிழை செய்ததில்லை. நான் அவருக்கு பிழை செய்ததில்லை. இருந்தாலும் எங்களை அறியாமல் ஏதாவது பிழைகள் இடம்பெற்றிருந்தால் அதற்கு மன்னிப்பு கோரியவனாக, இதற்கு பிறகும் உங்களது அரசியல் வளர்ச்சிக்கு எங்களது உதவிகள் தேவைப்பட்டால் இன்ஷா அல்லாஹ் எங்களால் இயன்ற உதவிகளை செய்து தருவோம் என்று வாக்கு கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது முன்னாள் உப தவிசாளர் அவர்களை பிரிய முடியாமல் பிரிய வேண்டிய கால கட்டம் அவர் பிரிகின்றார். அவர் நேர்மையானவர் நேர்மையாக நடக்கின்றார். மேலும் அவரது அரசியல் வாழ்க்கை வளர வாழ்த்துக் கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ முன்னாள் உப தவிசாளர் அவர்களே, உங்களது அரசியல் வாழ்க்கை மேலும் நீடிக்க வேண்டும். என்ன என்று தெரியாத எங்களுடன் மிகவும் அன்னியொன்னியமாக வாழ்ந்து

இருக்கின்றீர்கள். எங்களை வழிகாட்டி இருக்கின்றீர்கள். அதற்காக எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, இன்றய அமர்வில் கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரையில் இருந்து அந்த பகுதியை புறம்பாக தயாரித்து கௌரவ உறுப்பினர் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளரை பணிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
ஒவ்வொரு மனிதனுக்கும் 04 பக்கங்கள் இருக்கின்றது. ஒரு பக்கம் ஊருக்கு தெரியும் நாம் யார் எவர் என்று, இன்னுமொரு பக்கம் ஊருக்கும் தெரியும் நமக்கும் தெரியும் யார் என்று, இன்னுமொரு பக்கம் நமக்கும் தெரியாது ஊருக்கும் தெரியாது. இன்னுமொரு பக்கம் வெளியாட்கள் யாருக்கும் தெரியாது நமக்கு மட்டும் தெரியும். இவ்வாறு 04 பக்கங்கள் இருக்கின்றது. அதிலே நீங்கள் என்னை பார்த்த பக்கங்கள் உண்மையிலே மனதார சந்தோசப்படுகின்றேன். நான் இந்த சபையில் இருந்த இந்த காலப்பகுதியில் யாருடனும் மனத்தாபப்படக்கூடாது சந்தோசமாக வந்திருந்தேன். இருந்தாலும் 02 பேருடன் சிறிய மனத்தாபம் ஏற்பட்டது. அதை தீர்க்க எவ்வளவு முடியுமோ முயற்சி செய்து தீர்ப்பேன். அது எனது கடமை.

ஒன்று சகோதரர் முஸம்மில் அவர்கள் அவர் ஒரு நல்ல மனிதர். யார் என்ன சொன்னாலும் நான் அவரை விட்டுக் கொடுக்க மாட்டேன். அந்த குடும்பத்திற்கு சென்று மனசார தேநீர் அருந்திட்டு வர வேண்டும். அது எனக்கு இருக்க வேண்டிய பண்பு. முதன் முதல் ஒரு மனிதர் எம்மை தூக்கிட்டு வரும் போது அவரை தள்ளிவிடுவது என்பது கூடாது. இருந்தாலும் ஒரு சந்தர்ப்ப சூழ்நிலை அவ்வாறு வந்துவிட்டது. ஆனால் நான் அவரை ஒரு உயர்ந்த இடத்திற்கு வைக்க வேண்டும் என்று முயற்சி எடுத்திருக்கின்றேன். சந்தர்ப்பம் கிடைக்கும். அதே போல் கௌரவ தவிசாளர் அவர்கள் என்னை பெரிய ஒருவராக மாற்றி பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர். ஒரு சந்தர்ப்பத்தில் என்ன நடந்தது என்று தெரியாது அவரும் போ என்று சொல்லிவிட்டார். எனக்கும் அது தாங்க இயலாமல் போய்விட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் போ என்று சொன்னது அதில் தெளிவுகாண வேண்டும். கௌரவ உறுப்பினராக லீவு பெற்ற பின் நீங்கள் போய் கௌரவ உறுப்பினராக திரும்பி வந்ததற்கு பின்னர் வாருங்கள் என்று, அதற்கு ஒரு பிண்ணனி இருக்கின்றது. அதுதானே தவிர உங்களை கொச்சப்படுத்துவதற்காக இல்லை.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
அதோடு சேர்ந்த மனக்கசப்பு ஒன்று ஏற்பட்டது. கௌரவ தவிசாளரை சங்கடப்படுத்திவிட்டேன். அந்த 02 சங்டமும் எனது மனதில் அழுத்திக் கொண்டு இருக்கின்றது. நிச்சயமாக அதற்கு கடன் பட்டிருக்கின்றேன். ஏதோ ஒரு வகையில் நிவர்த்தி செய்வேன். இன்னுமொரு தேர்தல் வந்தால் நிச்சயமாக நீங்கள் கேட்கவேண்டும். அந்த சந்தர்ப்பத்திலும் நான் உங்களை தவிசாளராக்கி பார்க்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, உறுப்பினர்களுக்கு கூறுகின்றேன் விசேடமாக பெண் உறுப்பினர்களுக்கு, உத்தியோகத்தர்கள் என்பது அவர்கள்தான் இயந்திரத்தின் அச்சாணி. நாம் கூடியளவு அவர்களிடம் பேசி நமது வேலைகளை செய்விக்க வேண்டும். ஏனென்றால் நானும் ஒரு உத்தியோகத்தர் அவசரமாக எமது வேலைகள் நடக்காவிட்டால் மிகவும் மனத்தாபப்படுகின்றோம். எனவே இன்னும் மூன்று நான்கு மாதம் நீடிப்பதற்குரிய சாத்தியக்கூறு இருக்கின்றது. எல்லோரும் சேர்ந்து உத்தியோகத்தர்களை அணுகி செய்தால் பிரியும் போது நல்லவர் என்ற பெயரை பெற்று விடை பெறுவோம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தாமதம் ஆகுவதற்கு உறுப்பினர்களிடம் மன்னிப்புக் கேட்கின்றேன். குறை என்று சொல்வதற்கு இல்லை கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபைக்கு வந்து 36வது

அமர்வாகிவிட்டது உறுப்பினர்கள் என்ற ரீதியில் மிகவும் வெட்கப்படுகின்றேன். ஏனென்றால் ஒரு முகவரி இடப்பட்ட கடிதம் என்பது ஒரு தபால்காரர் தபால் காரியாலயத்தில் அனைவரும் பார்க்கப்பட வேண்டியது. உறுப்பினர் ஒருவருக்கு நானோ எவராக இருந்தாலும் பெயரிடப்பட்டு கடிதம் வரும் போது எழுதத் தெரியாத ஒரு காகிதத்தில் தமிழை எழுதத் தெரியாத உத்தியோகத்தரால் இந்த சபையில் வேலை செய்கின்றார் என்று மிகவும் மனவருத்தப்படுகின்றேன். வெட்கமாக இருக்கின்றது. எம்.எஸ். சரீபா வேறு எதுமே இல்லை ஒரு காகிதம். வெளிப்புறம்தான் இந்த முகவரி என்று பாரத்தேன் உட்புறமும் எம்.எஸ்.சரீபா. உண்மையாக வெட்கமாக இருக்கின்றது. நான் ஒரு கௌரவ உறுப்பினர் என்றாலும் நான் ஒரு ஆயுர் வேத பதிவு செய்யப்பட்ட ஒரு வைத்தியராக பரம்பரையாக இலங்கையிலே ஒரு முஸ்லிம் பெண்ணாக விஷ வைத்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்மணி என்பதில் பெருமிதம் அடைகின்றேன். இந்த பெருமை எனது தந்தைக்கு போய் சேரும். இது யாருமே கற்றுக் கொள்ள முடியாது. இந்த வைத்தியத்தை எனது இளமை காலத்தில் இருந்து இன்றுவரை பொறுமையாக செய்து வருகின்றேன். எனக்கு பெருமை வேண்டும் என்பதற்கு அல்ல. மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று. நான் மக்களை மதிக்கக்கூடியவள். எனக்கு இந்த உறுப்பினர் கிடைத்துதான் மதிக்க தெரிந்தவள் அல்ல. என்னை கேட்டால் எல்லோருக்கும் தெரியும். அநியாயம் நடப்பதற்கு விட்டுக்கொடுக்க மாட்டேன்.

1992ம் ஆண்டு சமூக சேவையாளராக கடமையாற்றி இருக்கின்றேன். நற்பட்டிமுனையில் இருக்கும் திட்டமிடல் பணிப்பாளர் மர்ஹூம் கரீம் சேர் அவர்கள் இன்றைக்கும் அழைப்பார் ஒரு பொதுச் சேவையாளி என்று, அந்த நேரம் சனசமூக நிலையத்தில் இருந்து ஜனசக்தி ஒன்றினால் மக்களிடம் 100.00 ரூபா பணம் அறவிட்டு அல் அர்ஷத் வீதியை செய்து கொடுத்தவள் நான். மர்ஹூம் KP விதானை அவர்களுக்கும் தெரியும். இந்த இடத்தில் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால் மக்களோடு பரிமாறிக் கொண்டிருக்கும் மருத்துவத் துறை நான் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். எனக்கு கிடைத்திருக்கின்ற அத்தனை தொழிலும் அல்லாஹ்வுக்கு பொருத்தமாக நடந்து கொள்வது. ஒரு கடிதத்தில் இங்கு ஏதாவது ஒரு முறையீடு வந்தால் அரசியல்வாதிக்கு பின்னால் எதிர்ப்புக்கள் இருக்கும். அதற்கு நாங்கள் பதில் அளிக்கும் போது யார் என்று சொல்லித்தான் இந்த கடிதத்தை கொடுத்திருப்பார்கள். கௌரவ உறுப்பினர் என்றுதான் இல்லாவிட்டாலும் ஜனாபா அல்லது திருமதி என்று ஒரு மரியாதை இல்லையா இந்த சபையில் வேலை செய்பவர்களுக்கு. இந்த கடிதம் எழுதிய உத்தியோகத்தர் யார் என்று எனக்கு தெரிய வேண்டும். இந்த கடிதத்திற்கு விலாசமிட்ட உத்தியோகத்தர் யார் என்று தெரிய வேண்டும். இவரது தாபன விதிக்கோவை என்றால் என்ன என்று தெரிய வேண்டும். நிதிப்பிரமானம் என்றால் என்ன என்று தெரிய வேண்டும். ஒழுக்காற்று நடவடிக்கை என்றால் என்ன என்று தெரிய வேண்டும். இல்லை என்றால் அந்த உத்தியோகத்தர் இவ்விடத்தில் வேலை செய்யக்கூடாது.

நான் கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களை மதிக்க வேண்டும் என்றுதான் இவ்வளவு நாளும் பொறுமையோடு இருந்தேன். இல்லை என்றால் நானும் முகநூலில் இட்டு, Whatsapp இல் இட்டு, மற்றவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்து எனக்கும் இது தெரியும். சட்டம் தெரியாமல் வரவில்லை. சட்டத்தை ஒரு வருடம் கற்றுவிட்டுத்தான் இங்கு வந்திருக்கின்றேன். நீதி என்பது எது என்று எனக்கு தெரியும். அல்லாஹ்வை பயந்தவளாக இருக்கின்றேன். எனது சகோதரி இந்த சபையால், இந்த சபை நிர்வாக உத்தியோகத்தரால் பழிவாங்கப்பட்டிருக்கின்றார். ஏதோ ஒரு காரணத்தினால் பாதைப் பிரச்சினையில் எனது சகோதரன் குறுக்கிட்டதனால் பழிவாங்குகின்றார்கள். நிச்சயமாக இந்த பழிவாங்கும் நிர்வாக உத்தியோகத்தர்கள் இந்த சபையில் இருந்து நீக்கப்பட வேண்டும். இல்லை என்றால் நான் இதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுப்பேன். என்னை மன்னிக்க வேண்டும். கணவனை இழந்த ஒரு விதவை. இன்றைக்கு அந்த இடத்தில் நீங்கள் கேட் வைப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. நியாயம் ஒன்றுதானா? பாதையில் கட்டடத்தை எழுப்பி விட்டார்கள் இதை நான் சொன்னால் பொல்லாதவள் என்று அடுத்த வீட்டுக்காரர்களிடம் காட்டிக் கொடுக்கின்றீர்கள். இது இந்த நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு நல்லதா?

நான் வந்து நிர்வாக உத்தியோகத்தர்களை செயலாளரிடம் இது சம்மந்தமாக கதைக்கும் போது என்னை உடனடியாக சொன்னார் நீதிமன்றத்தில் பாருங்கள் என்று, என்னுடைய கணவனுக்கு

அனுப்ப வேண்டிய கடிதத்தை எனக்கு எப்படி அனுப்புவார்கள். எனக்கு என்ன சம்மந்தமான பிரச்சினை என்று அனுப்பி இருக்கின்றார்கள். இதில் எனது மனித உரிமை மீறி இருக்கின்றது. இன்றில் இருந்து கேட்டுக்கொள்கின்றேன். தொடர்ந்து இந்த நடவடிக்கை நீடிக்குமானால் நான் மனித உரிமையில் வழக்கு தொடர்வேன் என்பதையும் இந்த சபையில் கூறி, கௌரவ தவிசாளர் அவர்களே, சகல உறுப்பினர்களுக்கும்தான் உறுப்பினர்களை கௌரவிக்க இந்த சபையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் யாருக்குமே தெரியாது.

Reception இல் இருக்கும் உத்தியோகத்தர் உறுப்பினர் ஒருவரை பெயர் சொல்லி அழைக்கின்றார். மிகவும் வெட்கக்கேடாக இருக்கின்றது. முதல் வயதிற்கு மரியாதை கொடுக்கச் சொல்லுங்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர்தான் உறுப்பினர். உறுப்பினராக இருந்து எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றால் நாங்கள் வெளியில் இருந்து வந்தால். முதலாவது அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். மீண்டும் மீண்டும் சொல்கின்றேன். மிகவும் வேதனையாக இருக்கின்றது. கடுமையாக மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளேன். ஏன் இவ்வாறு அவமானப்படுத்துகின்றீர்கள். அல்லாஹ் என்னை அவமானப்படுத்தமாட்டான் என்று நம்பிக்கை இருக்கின்றது. எனக்கு எதிரிகள் இருக்கலாம், துரோகிகள் இருக்கலாம். ஆனால் நான் யாரையுமே எதிரியாக, துரோகியாக பார்ப்பதில்லை. நான் உள்ளத்தால் யாருக்கும் துரோகம் செய்ய நினைப்பதில்லை. S24 வது வாய்க்காலில் சிறு காண் பிரச்சினையை கூட என்னுடைய தலையில் சுற்றி வளைத்துவிட்டு நான் Court இற்கு சென்றேன். எல்லாவற்றையும் சாய்த்து விட்டிருக்கின்றேன்.

நீதியாக வேலை செய்ய விருப்பம் இல்லை என்றால் வேறு இடத்தில் வேலை செய்யுங்கள். இவ்விடத்தில் பழி தீர்க்கக் கூடாது. நான் தவிசாளரை கொண்டு வருவதற்கு மும்முரம் அளித்துவிட்டேனாம் என்று அதுகூட பிண்ணனியில் ஒலிக்கின்றது. நீங்கள் நினைக்கக்கூடாது இன்னொருவர் கதை கேட்டு செயற்படமாட்டேன். எந்த வார்த்தையும் என்னுடைய காதில் விழ வேண்டும். இன்றைக்கு நான் மாதம் 130000.00 ரூபா சம்பளம் எடுப்பேன். அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹ் எனக்கு அந்த பாக்கியத்தை தந்திருக்கின்றார். நினைக்கக்கூடாது இந்த சபைக்கு வந்துதான் உழைத்துக் கொண்டிருக்கின்றேன் என்று, எனது கணவனுக்கும் அல்லாஹ் கொடுத்திருப்பது பாக்கிய தொழில். எனக்கு எந்தப் பக்கமும் வருமானம் இருக்கின்றது. தொழிலால் இழந்தால் எனது வீட்டில் வைத்தியத் தொழிலை செய்வேன். உறுப்பினர் என்ற ஒன்றை இறைவன் எனக்கு தந்தது இப்படியான உண்மைச் செயல்கள் தெரிய வேண்டும் என்றுதான். நான் உறுப்பினராக இழந்து சென்றாலும் தவறு நடக்கின்ற இடத்தில் தட்டிக் கேட்பேன். விட்டுக்கொடுக்க மாட்டேன். ஆகவே என்னுடைய விடயத்தில் யார் யார் விளையாடி இருக்கின்றார்கள் என்று இதற்கு நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தவிசாளர் அவர்களை கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினரின் ஆதங்கம் விளங்குகின்றது. இதன் பிண்ணனியில் யார் எந்த பிழை செய்திருக்கின்றார் என்று பக்க சார்பற்ற முறையில் கௌரவ உப தவிசாளர் அச்சி முஹம்மட் அவர்கள், கௌரவ உறுப்பினர் முஸம்மில், கௌரவ உறுப்பினர் சிஹாமா, கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் சேர்ந்து இதை முழுமையாக ஆராய்ந்து எனக்கு ஒரு அறிக்கையை தருமாறு பணிவாக வேண்டுகின்றேன். பிரதேச சபைகள் துரதிஸ்டவசமாகவும் மறுபக்கம் நமது விதி மக்களோடு நாளாந்த தொடர்புள்ள ஒரே ஒரு சபை பிரதேச சபை. பிரதேச சபை உறுப்பினர் பதவி என்பது உண்மையாக சட்ட ரீதியாக எமக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. ஆனால் எல்லாவற்றிலும் ஈடுபட வேண்டிய ஒரு தேவையான சபை. இது ஒரு நுணுக்கமான இடம். சட்ட ரீதியாக ஒரு பிரதேச சபை உறுப்பினருக்கு இதுதான் இடம் என்று யாப்பில் எந்த இடத்திலும் குறிப்பிடாதது துரதிஸ்டவசமான அங்கத்தவர்கள் நாம். அதனால் எமது நாளாந்த நடவடிக்கைகளில் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான அனுபவங்கள் இருக்கின்றது. இந்த சபையில் 20 பேருக்கும் நாம் கௌரவ உறுப்பினர்களாக வெவ்வேறு அனுபவங்களை கொண்டிருக்கின்றோம். அதனால் இது சரி இது பிழை என்று கூறுவதற்கு மிகவும் கஸ்டமான ஒரு இடம். அதனால் தயவு செய்து இந்த பிரச்சினையின் பிண்ணனிக்கு சென்று நிச்சயமாக ஒரு

உறுப்பினருக்கு இந்த சபையில் இருந்து கடிதம் அனுப்பும் போது அது என்ன பிரச்சினையாக இருந்தாலும் அது தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட முடியாது. கௌரவ உறுப்பினர் என்று விழிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அவர் இந்த சபையை பொருத்தவரைக்கும் சபையின் உறுப்பினர். அவ்வாறு ஒரு தவறு நடந்திருந்தால் நிச்சயமாக சபை சார்பில் நான் மன்னிப்பு கூற வேண்டும். அதற்குரிய நடவடிக்கை நிர்வாக ரீதியில் எடுப்பேன். இதன் பிண்ணனியை தயவு செய்து அதற்கு ஒரு விசாரணையை நடாத்தி எனக்கு ஒரு வழிகாட்டலை தருமாறு உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வருமானத்தை பெற வேண்டியதற்காக பல வழிகள் இருக்கின்றது. அதாவது எமது நீதிமன்றத்திற்கு அனேகமாக ஒரு நாளைக்கு 50, 100 பைசிக்கிள் வருகின்றது. எமது சபையால் அதற்கு பக்கத்தில் இருக்கின்ற வளவை கேட்டு Parking ஒன்று அமைத்தால் ஒரு பைசிக்கிளிற்கு 20 ரூபா படி அறவிட்டாலும், ஒருவருக்கு தொழிலும் கொடுக்கலாம். வருமானத்தையும் பெறலாம் என்பது எனது அபிப்பராயம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

செயலாளர் அவர்கள் Registrar உடன் பேசி அந்த வளவு நீதிமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதா? என்று கேட்டு, அதற்கு ஒதுக்கப்பட்டால் அதை அவர்களிடம் கேட்க வேண்டும். அது பிரதேச செயலாளரிடம் இருக்குமானால் நீதிமன்றத்தின் ஆதரவோடு பிரதேச செயலாளரிடம் கேட்கலாம். சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌஷாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மாற்றாக அரசாங்கம் உப அலுவலகம் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை இல்லாமல் ஒரு தனியார் தபால் அலுவலகம் ஆரம்பிப்பதற்கு அனுமதி கோரி அந்த இடத்தில் பல தனியார் தபால் அலுவலகத்தில் Stationery Shop உம் தனியார் தபால் அலுவலகம் உம் நடக்கின்றது. அப்படியான இடத்திற்கு பணத்தையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமானால் அந்த முயற்சி எடுப்பதற்கு இதைவிட திறமானது ஒரு தனியார் தபால் அலுவலகம் ஆரம்பித்து அதன் மூலமாக PA Payments இற்கு அனுமதி வருமா என்பதுதான் கேள்வி. ஆனால் நாம் முயற்சி ஒன்று எடுத்து பார்ப்போம்.